# காஞ்சி

அண்ணாதுரை

விலை 20 காசு

31-12-67

## மதுரை மாவட்ட
## தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள்



எம் இராசாங்கம்—கம்பம்



R. முனியாண்டி—நிலக்கோட்டை



சா. பெ. மலைச்சாமி—மேலூர் வடக்கு

# சார், தெரியுமா சேதி?

## வேலை வேண்டும்-பேச்சு அல்ல!

பஞ்சாப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி சொற்பொழிவாற்றத் தொடங்கினார்! அவ்வளவுதான்! 'எங்களுக்கு வேண்டுவதுவேலைதான்! சொற்பொழிவு அல்ல!' என்று, கூறிக்கொண்டே பேச்சைக்கூட கேட்காமல் மாணவர்கள் வெளிநடப்புச் செய்தார்களாம்! போலீசார் அவர்களை வளையமாகச் சூழ்ந்துகொண்டு பேச்சைக் கேட்கும்படியாகச் செய்தார்களாம்! சுவையான செய்தி அல்லவா!

## நாளைக்கு என்னவோ?

கவர்னர் பதவி—ஒரு ரப்பர் ஸ்டாம்ப் போலவேதான் இருக்கிறது. விரும்புவோர் எடுத்து முத்திரை குத்திக்கொள்ளலாம் என்றார் முன்னாள் குடியரசுத் தலைவர். இந்த பதவி தேவையானதுதானா? என்ற கழகத்தின் கேள்விக்குப் பலரும் விடை காண முயல வேண்டிய நிகழ்ச்சிகள் இந்தியத் துணைக் கண்டத்தில் நடந்தேறின. இப்போது இப்பதவி பற்றி கேரள முதல்வர் கூறியிருக்கிறார் கவர்னர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று நாளைக்கு சொல்லக்கூடும் இப்பதவியே தேவை இல்லையென்று! சொல்லாமலா இருக்கப் போகிறார்!

## இந்தத் திமிருக்குப் பெயரென்ன?

மொழி உணர்ச்சியைத் திமிரான உணர்ச்சி என்று பேசி இருக்கிறார் இந்தியப் பிரதமர் இந்திரா! இந்தி மொழி ஒன்றுதான் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கும்; விரைவிலேயே இதற்கான நடவடிக்கை எடுப்போம் என்று மத்திய அமைச்சர்கள் அடிக்கடி பேசுகின்றனர்; இந்தி தெரியாது என்றால் பாவம் வந்து சேரும் என்கிறார் மொரார்ஜி! இந்தி தேசிய மொழி ஆவதற்குச் சாதகமான சூழ்நிலையைத் தோற்றுவிக்க 1000-தொண்டர்களை அனுப்பிப் போராடப் போவதாகநாகபுரி ஆங்கில ஒழிப்பு சமிதி தெரிவித்திருக்கிறது! இவையெல்லாம் எந்தத் திமிரான போக்குகள் என்று தமிழ்ப் பற்று மிக்கோர் எதிர்பார்க்கவே செய்வார்கள் இல்லையா!

## இதயத்தில் என்னவோ?

மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் திரிகுண சென்னின் இயல்பான பண்பு என்ன என்பதைக் கண்டு பிடிப்பது கடினமாக இருக்கிறது. சட்ட அமைச்சர்கள் மாநாட்டின்போது, சட்டங்கள் இந்தியில் மொழிபெயர்க்கப்படுவதில் இன்னின்ன சங்கடங்கள் இருக்கின்றன என்று எடுத்துக் காட்டினார்! இதயம் புரிந்தது! அடுத்து இந்தியே யூனியன் மொழி; இந்தியைப் படித்தே தீரவேண்டும் என்றார்—இதயம் குழம்பியது. இப்போது உத்தியோகத்துறையில் இந்தியுடன், ஆங்கிலமும் இணைந்தே இருக்கும் வகையில் அரசியல் சட்டத்தையே திருத்தலாம் என்கிறார்! இதயம் ஆட்டம் கொடுக்கிறது! யார் இந்த சென்! அவர் எந்தப் பக்கம் இருக்கிறார்? இதயத்தின் அடியில் இந்தி எதிர்ப்போ? என்றெல்லாம் நினைக்கத்தோன்றுகிறது. இதயம் தூய்மையானதே என்றால், மத்திய அரசு அவர்மேல் "கண்" வைத்தே இருக்கும்!

## வானத்திலிருந்து வந்தவள்!

பேச்சு ரசனைக்கிடையே ஒருவர், ஒரு சாதாரணமான கருத்தைக் கூறுகிறபோது 'நீ என்ன வானத்திலிருந்தா குதித்தாய்?' என்பார்கள்! கேலிப் பேச்சாக இருந்தது இது. இப்போது உண்மையாக ஒருத்தி வானத்திலிருந்து குதித்திருக்கிறாள், மாஸ்கோவில்! உண்மைதான்! மாஸ்கோவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது, ஒரு விமானத்தில் 36 000 அடிகளுக்கு மேலே பறந்துகொண்டிருந்தபோது விமானத்தில் ஒருத்தி ஒரு பெண் குழந்தையைப் பெற்றாளாம். புதேவ் செலிங்கே என்னாம் அவள். மனைவியைத் தனியே அனுப்பிய கணவன், அவளை மீண்டும் வரவேற்றபோது தாயோடும் மகவோடும் வரவேற்றிருக்கிறார்! அதுவும் வானத்தில் பிறந்தவளை!

## நன்றி, நன்றி, நன்றி!

கேப் டவுனைச் சேர்ந்த லூயி வாஷ்கான்ஸ்கி என்பவருக்கு ஒரு பெண் இதய தானம் செய்திருந்த செய்தியும், அதனைப் பொருத்திக்கொண்டு, உயிரோடு இரு வார காலம் போராடிக்கொண்டிருந்த செய்தியும்தான் உங்களுக்குத் தெரியுமே! கடைசியாக அவர் இறந்தே போனார்! இது தொடர்பாக இப்போது ஒரு புதிய செய்தி! இதய தானம் செய்த பெண்ணின் தந்தைக்கு, இதயத்தைப் பொருத்திக் கொண்டவரின் மனைவி கிறிஸ்துமஸ் வாழ்த்து அனுப்பி இருக்கிறாளாம், துக்கத்தையும் மறந்து; நன்றி காட்டும் எதிரொலியாக! அன்பு ஆழமானது என்பது உண்மையேதானே?

## அற்புதம் நிகழ்கிறது!

சர்க்கரை விலையைக் காரணம் காட்டி ஓட்டல்கள் விலையை உயர்த்தி இருக்கிற இந்த நேரத்தில் குடந்தையில் ஒரு அற்புதமே நிகழ்ந்திருக்கிறது! மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி ஒருவரின் முயற்சியினால், காபி, இட்லி, தோசை, காரவகைகள் அனைத்தும் விலை குறைத்து விற்கச் சம்மதித்து — விற்றும் வருகிறார்களாமே! அற்புதம் நிகழ்ந்துவிட்டதா என்ன?

## காமராசர் கொடும் பாவி!

ஆங்கில எதிர்ப்பு என்பதன் பேரால் இந்தி வெறி எப்படியெல்லாம் தாண்டவமாடுகிறது என்பதை, காமராசர் தாசர்கள் கொஞ்சம் புரிந்துகொள்ள வேண்டும்! லட்சுமணபுரியில் ஆங்கிலத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தவர்கள், காமராசரது கொடும்பாவியையும் கொளுத்தி இருக்கிறார்களாம்! ஆங்கிலத்துக்கும் காமராசருக்கும் என்ன சம்பந்தம் என்பது புரியாமலேதான் இது நடந்திருக்க வேண்டும் இல்லையா?

—தொகுப்பு: ராஜிமணாளன்.

காஞ்சி

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 4 31—12—67 இதழ் 23

# உலகத் தமிழ் மாநாடு!

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்.

என்றான் பாரதி! ஆமாம்! திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும் என்ற அடியினை மீண்டும் மீண்டும் சொல்லிச் சொல்லி, வணக்கம் செய்ய வந்துவிட்டார்கள் என்ற பெருமிதத்தில் திளைத்துத் திளைத்து நாளெல்லாம் நினைந்து நினைந்து உணர்ச்சிப் பெருக்கில் மிதந்து மிதந்து தமிழ்க் கடலாடத் தக்கதோர் தருணம் வந்துவிட்டது.

1968ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 3ம் நாள் தொடங்கி, 11–ம் நாள் வரையில் தமிழகத் தலைநகரில் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெறவிருக்கிறது.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம் என்று சொல்லிச் சொல்லிப் புளகாங்கித மடைந்த பாரதியின் கூற்று எத்துணை உண்மை என்று எடுத்துக் காட்டுவதுபோல,

சுமார் நாலாயிரத்துக்கும் மேலாக உலக மொழிகள் இருக்க—ஒரே ஒரு தமிழுக்கு மட்டும் உலக மாநாடு நடைபெறுகிறது; இதில் உலகத்தின் பல்வேறு திசையிலிருந்தும், நாட்டிலிருந்தும் சார்பாளர்கள் கலந்துகொள்கிறார்கள். கலந்து கொண்டு தமிழ் பற்றிக் கருத்துரை வழங்குகிறார்கள். கலந்து பேசுகிறார்கள். மீண்டு சென்று, கண்டதையும் கேட்டதையும் உலகமெலாம் பரப்புகிறார்கள்! என்றால், தமிழுக்கும், தமிழருக்கும், தமிழகத்துக்கும் எத்தனைப் பெருமை! எத்தனைச் சிறப்பு!! என்பதை எண்ணி எண்ணியே இதயம் களிநடமாடுகிறது!

வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்—என்ற கனவு நினைவாகத் தொடங்கிவிட்ட பெருமிதத்தில் திளைப்பதனை யார் தடுத்து நிறுத்திவிட முடியும்?

உலகத் தமிழ் மாநாடு நமக்குள்ளே பழங்கதைகள் சொல்லி, காலத்தைக் கடத்தக் கூட்டப்படவில்லை. இறவாத புகழுடைய புதுக் கருத்துக்களைத் தொகுத்து, வகுத்து தரணிக்குத் தருதற்குத் தயாராகும் வெற்றியினைப் பெற்றுத் தருவதற்காகவே கூட்டப்படுகிறது.

மாநாட்டின் தொடக்கம் ஜனவரித் திங்கள் 3-ம் நாள்தான் என்றாலும், முதல்நாள் தொடங்கியே பற்பல புற நிகழ்ச்சிகளை மாநாட்டுக் குழு மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சராகவும், நமக்கெல்லாம் வழிகாட்டியாகவும், இந்தியத் துணைக்கண்டத்துக்கே ஜனநாயகத்தத்துவத்திற்குத்தலைமகனாகவும் தமிழகத்தின் பொற்காலத்தை மீண்டும் உண்டாக்கிக் காட்ட இரவு பகல் எந்த நேரத்திலும் ஓய்வு ஒழிச்சலின்றி செயல் செயல் செயலென்றே பாடுபட்டு வருபவருமான அறிஞர் அண்ணா அவர்களது உருவச்சிலை, முதல் நாளன்று திறந்து வைக்கப்படுகிறது.

இரண்டாம் நாளன்று கடற்கரையில், உலகப் பொதுமறை வகுத்த திருவள்ளுவருக்கும், முடி மன்னர் பாராட்டிய மூதாட்டி ஔவையாருக்கும் கவிச்சக்கரவர்த்தி கம்பருக்கும் தமிழ் வளர்த்த ஆங்கிலப் புலவராம் ஜி. யு. போப்புக்கும், ஒப்பிலக்கண்டளித்த கால்டுவெல்லுக்கும், நாட்டுப் பற்றுப் பாடல்களால் சுதந்திரக்கனலை ஊட்டி வளர்த்த பாரதியாருக்கும், எப்பக்கம் வந்து புகுந்துவிடும், இந்தி எத்தனைப் பட்டாளம் கூட்டிவரும் என்று வெகுண்டெழுந்து நின்ற பாரதிதாசனுக்கும், பறங்கியரைப் பாரஞ்சச் செய்வேன் என்று கலம் ஓட்டி, கனல் மூட்டிய வ. உ. சிதம்பரனாருக்கும், இத்தாலியராயினும் இன்பத் தமிழ் காத்து வளர்த்த வீரமா முனிவருக்கும், தமிழைப் பழித்தார்கள் என்ற காரணத்தால், பழித்த தருக்கர்களது தலையில் கல்லேற்றிக் கொணர்ந்து கற்புக் கடவுளாம் கண்ணகிக்குக் கல் நாட்டினான் செங்குட்டுவன்! என்ற வரலாற்றைப் படிப்போரின் சிந்தனைக்கும் சிறப்புக்குமாக மற்றுமொரு முறை கண்ணகிக்கும், சிலைகள் வடித்து சிறப்புச் செய்யப் பெறுகிறது! யாவும் தமிழ் மாநாட்டின் தொடக்கமாக! நினைவாக!!

தமிழுக்காகத் தமிழ்ப் பற்றுமிக்கோரால் நடாத்தப் பெறும் மாநாடு அல்லவா! மாநாடு ஊர்வலம் என்றால் சீரோடும் சிறப்போடும் நடாத்திக் காட்டி வரலாறு படைத்த பரம்பரையினரின் முன்னணியினர் முன்னின்று நடத்தும் ஊர்வலமும் உண்டு!

இதன் எழிலையும் பொழிலையும் பற்றி எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லைதான்! தமிழகமே தலைநகருக்குத் திரண்டு வரப் போகிறது! தமிழ் விழா காண!

அத்தகையோர் கண்ணுக்கும் கருத்துக்குமாகக் காட்சி அரங்குகள், கருத்து அரங்குகள் என்று பலப் பல!!

நாலாம் நாள் தொட்டு, 11-ம் நாள் முடிய மாநாடு—சிறப்பு நிகழ்ச்சிகள் சொற்பொழிவுகள்! தீவுத் திடலிலே, நிர்மாணிக்கப் பெற்றுள்ள புகார் நகரத்தில்!! தமிழ்ப் புலவர்களும், தமிழாய்ந்த அறிஞர்களும், தமிழுக்காகவே தங்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் எல்லாம் இங்கே பேசுகிறார்கள்! இசை நிகழ்ச்சிகள்! கவிதைப் போட்டிகள்!

அம்மம்மா! சிறப்பினை எழுத ஏடு இடம் தராதே! தமிழுக்கு விழா! தமிழகத்தில் விழா! தமிழர்களால் நடாத்தப் பெறும் பெருவிழா!

வாரீர்! வாரீர்! தலைநகர் நோக்கி வாரீர்! என்று உங்களை அழைப்பதில் பெருமை யடைகிறோம்!

# குடிமுழுகிப்போகாது!

—பழநி—

**அன்புள்ள நண்பா!**

சென்றகிழமை 'காஞ்சி'யில்வெளியான "தமிழ்நாடு காங்கிரஸ் கலைக்கப்படும்?" என்ற கட்டுரையைப் படித்திருப்பாய். அது உன் உள்ளத்தை எந்த அளவு புண்படுத்திவிட்டிருக்கும்? அல்லது சிந்தனையைத் தூண்டிவிட்டிருக்கும்? என்பதை என்னால் ஊகிக்க முடிகிறது.

அந்தக் கட்டுரை பிரசுரிக்கப்பட்டுவிட்டதனாலேயே தமிழ்நாடு காங்கிரஸ் கலைக்கப்பட்டுவிடும் என்று யாரும் நம்பமுடியாது—எதிர்பார்க்கவும் கூடாது.

ஆனால், இந்தி எதிர்ப்பு உணர்ச்சிக்குப் போராட்டத் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன அல்லவா—அந்தத் திட்டங்களில் ஒன்றாக, த. நா. கா. க.வைக் கலைத்துவிட்டதாக ஒரு அறிவிப்புக் கொடுப்பது—இந்தி வெறிபிடித்த பித்தர்களுக்கு ஒரு சரியான பாடமாக அமையும் என்ற மையக் கருத்தை வைத்துதான் அக்கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது என்பதை நீ ஒப்புக்கொள்வாய் என்றே நம்புகிறேன்.

**காங்கிரஸ் கட்சி கலைக்கப்பட்டுவிட வேண்டுமா? என்ற வாதத்தை மேற்கொள்ள வேண்டியவர்கள் நீயோ நானோ அல்ல; காங்கிரசுக்காரர்கள்—அதன் பெருந் தலைவர்கள், கட்சி குழு அங்கத்தினர்களது வேலை அது.**

காங்கிரஸ் கலைக்கப்பட வேண்டும் என்று நினைத்துப் பார்க்கிற நம்போன்ற நெஞ்சங்கள்—எந்த காங்கிரசை? என்றும் நினைக்கத்தான் வேண்டியிருக்கிறது. நாம் நினைத்துப் பார்க்கும் உரிமை பெற்றவர்கள். அவ்வளவுதான்! ஆனால் காங்கிரஸ்காரர்களுக்குத்தான் செயல்படுத்திக்காட்டும் உரிமை இருக்கிறது என்பது கைக்கரியாயிற்றே நண்பா!

நினைத்துப் பார்க்கிற அளவுக்கு மட்டும் பெற்றுள்ள உரிமையின் அடிப்படையில்தான் சிந்தனை விரித்துச் செல்லப்பட்டிருக்கிறது அக்கட்டுரையில். அதேபோது தான் எந்தக் காங்கிரசை என்ற வினாவும் உடன் தொக்கிக்கொள்கிறது.

கொடி காத்த குமரனின் வீர வரலாற்றைக் கொண்டிருக்கிறதே அதனையா?

கொட்டிக் குவித்துள்ள பணக்குவைக் கிடையே நீந்துவதை விடுத்து, நாடு, மக்கள் என்ற பொது நலக் கருத்தில் நாட்டின் சுதந்திரத்திற்காக தன் நலமெலாம் துறந்த வீரர்களது வரலாற்றைச் சுட்டிக் காட்டுகிறதே அதனையா?

ஆகஸ்டுப் போராட்டம் வன்முறைப் பேயாட்டங்களுக்கு இடமளித்து, அதனால் காங்கிரசுக்கே இழிவைச் சுமந்துவந்த போதிலும், அந்த போராட்ட வீரர்களுக்கு என் வாழ்த்தும் வணக்கமும் என்று நேரு பெருமகனார் வாழ்த்துரை அனுப்பினாரே, அந்தக் காங்கிரசையா?

உப்புச் சத்தியாகிரகம் நடத்தி உணர்வைத் தூண்டிய காங்கிரசையா?

தண்டி யாத்திரை நடாத்தி தன்மானம் காத்ததே அதனையா?

நவகாளி யாத்திரை நடாத்தி நாட்டு ஒற்றுமை பேணியதே அதனையா?

சுதந்திரப் போராட்டத்தில் முழுமூச்சாக ஈடுபட்டிருந்ததே அந்தக் காங்கிரசையா?

அல்லவே! அப்படியானால், இந்திவெறிப் பேயாட்டத்துக்கு ஈடு கொடுக்கும் ஒரு முறையாகக் கலைக்கப்பட வேண்டும் என்று நினைத்துப்பார்க்கிற காங்கிரஸ்தான் எது?

1965-ல் மாணவர்கள் மொழிப் போரில் ஈடுபட்டபோது வேட்டை மிருகங்களென மக்களைச் சுட்டுப் பொசுக்கியதே, அந்தக் காங்கிரசை!

கூலிக்காகக் குடி புகுந்து கூடாரத்துக்குள்ளேயே குத்து வெட்டு என்ற கோலாகலத்தைக் கொண்டுவந்து குவித்துக்கொண்டுள்ள காங்கிரசை!

வாக்களிக்கவில்லை என்ற வயிற்றெரிச்சலிலே குடிசைகளுக்குக் கொள்ளிவைத்து அந்த வெப்பத்தில் குளிர்காய்ந்ததே அந்தக் காங்கிரசை!

ஜனநாயகம் பேசிக்கொண்டே திருநெல்வேலி, அருப்புக்கோட்டை நகராட்சிகளைக் கலைத்ததே அதனைத்தான்!

(13-ம் பக்கம் பார்க்க)

# அறவழி மறவாதீர்!

மாணவர்களே!

நண்பர்களே!

உங்களுக்கும் எனக்கும் ஏற்பட்டுள்ள உறவு இதய பூர்வமானது; இன்று நேற்று ஏற்பட்டதல்ல; பல ஆண்டுகளுக்கு முன்பு அரும்பி மலர்ந்துள்ள தோழமையாகும்.

உமது தோழமையை நான் மிகப் பெரிய வலிவு என்றும், தி. மு. கழகத்துக்கே புதிய பொலிவு தருவது என்றும் உளமார நம்புகிறேன்.

உமது பேராதரவு, கழகம் மேற்கொள்ளும் செயல்களைச் செம்மைப்படுத்தி இன்று அதனை ஆளுங்கட்சியாக ஆக்கிக் கொடுத்திருக்கிறது.

இந்த நிலை வருவதற்கு முன்பு, கழகம் வளரப் பலியானோர் பலர்.

சொல்லொணாக் கொடுமைகளைத் தாங்கிக்கொண்டோம்; சோர்விலாது உழைத்தோம்; இன்று ஆளும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளோம்.

தி. மு. கழகம் நடாத்தும் இந்த அரசு சிறப்பானது. முறை அறிந்து, வழி தெரிந்து, அமைதிகாத்து தோழமை வளர்த்து. மக்கள் குறை அறிந்து அவற்றினைக் களைந்து நீதி நேர்மை வழுவாமல் நடைபெற்று வருகிறது என்பது குறித்து பல்வேறு முனைகளில் இருந்தும், பாராட்டுகள் கிடைத்திருக்கின்றன.

'இதுகளாவது ஆளுவதாவது என்ற ஏச்சுப் பேச்சு கிடைத்தது நமக்கு; முன்பு; இன்று இவர்கள் ஆட்சி நேர்த்தியாக இருக்கறது என்று பலதலைவர்கள் பாராட்டுகின்றனர்.

நாம் ஆட்சி நடத்தத் தக்க வலிவு பெறுவோம் என்று அன்றைய ஆளுங்கட்சி கருதவில்லை. நாம் கொடுமையைத் தாங்கிக்கொள்ள வேண்டியவர்கள், குட்டக் குட்டக் குனிய வேண்டியவர்கள் என்றே அவர்கள் தீர்மானித்தனர்; நாட்டுக்கும் உலகுக்கும் அறிவித்தனர்; தேர்தலிலே நாம் வெற்றி பெறக்கூடாது என்பதற்காக எல்லாவிதமான சக்தியினையும் ஒன்று திரட்டி போரிட்டனர்; மக்களின் நல்லெண்ணத்தை உமது பேராதரவு திரட்டித் தந்தது; வெற்றி பெற்றோம்; அரசு ஆளுகிறோம்.

அவர்களால் இதனைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

இந்த அரசு, அமைதி காத்து நிற்பது கண்டு அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

இதற்குப் பலருடைய பாராட்டுதலும் கிடைத்திருப்பது கண்டு அவர்கள் பொருமுகிறார்கள்.

இந்த அரசு நிலையானதாகி விடுமே என்பதனை எண்ணி பதறிப் போயுள்ளனர்.

எனவே அவர்கள், நாம் அரசு ஆளத் தொடங்கிய நாள்தொட்டு, நமது அரசுக்கு எதிர்ப்புக்காட்ட முனைந்து நிற்கின்றனர்.

பங்குச் சண்டை பதவிச் சண்டை மூட்டிவிட்டு, கழகம் உடைபடச் செய்யலாம் என்று எண்ணினர்; இயலவில்லை.

உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் திணறிப் போய்விடுவோம். அந்த நிலையில் நம்மைத் தீர்த்துக் கட்டிவிடலாம் என்று திட்டமிட்டனர்; இயலவில்லை.

நிதி நிலைமையிலே நெருக்கடி மூண்டுவிடும்; அதனைக் காரணமாகக் காட்டி விரட்டி விடலாம் என்று கருதினர்; இயலவில்லை.

படி அரிசித் திட்டத்தால், பெரிய நட்டத்துக்கு ஆளாகி, அதனாலேயே அழிந்துபடுவோம் என்று எண்ணினர்; இயலவில்லை.

ஆட்சி நடத்தத் திறனற்று ஆகாத முறைகளை மேற்கொண்டு ஊர் சிரிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவோம்; அந்த நேரமாகப் பார்த்து உருட்டிவிடலாம் என்று எண்ணினர் இயலவில்லை.

இருபது ஆண்டுகளாக, காங்கிரஸ் பிடியிலே இருந்துவந்த அதிகாரவர்க்கம் நம்மோடு ஒத்துழைக்காது நிர்வாகம் நடத்துவதிலே தகராறுகள் கிளம்பும். அதன் பயனாக இந்த அரசு கவிழும் என்று எண்ணினார்கள்; இயலவில்லை.

மத்திய அரசுக்குத் தூபமிட்டு நமது அரசின் போக்குக்குக் குந்தகம் விளைவித்துக் கெடுக்கலாம் என்று கருதினர்; இயலவில்லை.

இழிவான பிரசாரம் செய்து ஆத்திரமூட்டி, நமது மன அமைதியைக் குலைத்து. பரபரப்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டு பழி தேடிக்கொள்வோம் என்று எதிர்ப்பார்த்தார்கள்; நடைபெறவில்லை.

இடைத் தேர்தல்களிலே, எல்லா வலிவினையும் திரட்டிப் போரிட்டு வீழ்த்தலாம் என்று முயன்றனர்; இயலவில்லை.

இவ்வளவு முயற்சிகளும் முறிந்துபட்டது! காரணம் உமது பேராதரவு! மக்களின் நல்லெண்ணம்.

என்னை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்! பதவியில் என்னை இழுத்துப்பிடித்து உட்கார வைத்திருக்கிறார்களே ஒழிய, அதிலே இருந்தே தீரவேண்டும் என்ற விருப்பம் துளியும் அற்றவன் நான். எந்த முயற்சியாலாவது அவர்கள் வெற்றிபெற்று பதவிபோகும் நிலையை உண்டாக்கிவிடுவார்களானால் 'ஐயோ' என்று பதறும் மனநிலை எனக்குக் கிடையாது என்பதனை அறிவீர்கள்.

பதவி மூலம் நானோ என் நண்பர்களோ பலன், சுவை, உயர்நிலை பெறவேண்டும் என்ற துடிப்போ அரிப்போ கொண்டில்லை; அறிவீர்கள்.

இந்த அரசு பொறுப்பை ஏற்பதன்மூலம்,

காங்கிரஸ் கட்டிவைத்த சர்வாதிகாரத்தை உடைத்தெறிந்தோம் என்ற உண்மையை உலகுக்கு அறிவித்திருக்கிறோம்.

காங்கிரசு கட்சியினால் மட்டுந்தான் நிலையான அரசு நடத்த முடியும்; பிற கட்சிகளால்

முடியாது என்ற பொய் உணர்வை முறியடித்துக் காட்டிழுள்ளோம்.

வேறுபல காங்கிரசு அல்லாத அரசுகளில் உட்குழப்பம் மூட்டிக் கவிழ்த்திட முடிந்தது. இங்கு அதற்கு இடமில்லை என்பதனை அவர்கள் அறிந்துள்ளனர்.

எனவே அவர்களிடம் உள்ள ஒரே ஒரு வழி நமது அரசு, அமைதி காத்திட — சமூகத்தில் வன்முறை எழாது தடுத்திட இயலவில்லை என்ற நிலையை மூட்டிவிட்டு, மத்திய அரசினைக் கொண்டு நமது அரசைக் கலைப்பது ஒன்றுதான். இந்திய அரசியல் சட்டத்தின்படி இதற்குத் தேவையான அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கிறது.

"ஊரிலே அமைதி கெடவும், உடமைகள் அழிக்கப்படவும் இந்த அரசு காரணமாக இருந்திருக்கிறது. இந்த அரசினால் வன்முறையைத் தடுத்திட இயலவில்லை. எனவே இது அரசாள லாயக்கில்லை" என்ற காரணம் காட்டி; மத்திய அரசு, நமது அரசைக் கலைத்துவிட முடியும்.

இந்த நோக்கம் கொண்டே, கடந்த பல மாதங்களாகவே, பெருந்தலைவர் காமராஜரிலிருந்து, தி. மு. கழக ஆட்சியில் சட்டம் கெட்டுவிட்டது, ஒழுங்கு குலைந்துவிட்டது, அமைதி கெட்டுவிட்டது, அமளி அதிகரித்துவிட்டது என்று பேசிக்கொண்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் எம்மை அரசாளும் நிலையை ஏற்கச் செய்துவிட்ட நண்பர்களே, விரும்பியோ தெரிந்தோ அல்ல. இது குறித்து எண்ணிப்பார்த்திடாமல்

அவர்கள் விரும்புகிற சூழ்நிலை உருவாக இடங்கொடுத்து விட்டிருக்கிறீர்கள்,

இரயில் பெட்டிகள் கொளுத்தப்பட்டன சொத்துக்குச்சேதம் ஏற்பட்டிருக்கிறது: என்ற நிலைமையைக் கண்டு

இந்தி எதிர்ப்பு உணர்ச்சி கொழுந்து விட்டு எரிகிறது என்பதாக மத்திய அரசு கருதிக்கொள்ளும் என்று எண்ணுகிறீர்கள். ஆனால்

மத்திய அரசினர்பெட்டிகள் கொளுத்தப்படுகின்றன, அதனைத் தடுத்திட இயலவில்லை இந்த அரசினால். ஆகவே, இது ஆளத் தகுதியற்றது என்றுதான் எண்ணுகிறார்கள்.

அதன் தொடர்பாக இந்த அரசு கலைக்கப்பட்டாக வேண்டிய அரசு என்ற முடிவுக்கு மத்திய அரசு வந்திடின் நான் வியப்படைந்திடக் காரணமில்லை.

இந்த நிலையைக் காணவா அரசாளும் நிலையை எமக்கு ஏற்படுத்திக் கொடுத்தீர்கள்?

இந்த கழகம் ஆட்சி நடத்தும் நிலையைப் பிடித்திட முடியாது; கிட்டிடினும் அதிக காலம் நிலைக்காது என்று அவர்கள் கூறினர்! ஆமாம்—என்று உலகு கூறும்படியான முறையிலா நடந்துகொள்ள விரும்புகிறீர்கள்?

துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு பதவியிலிருந்து வெளியேற நான் தயங்கப் போவதில்லை ஆனால் அதற்குப் பிறகு? பாடுபட்டு அமைத்த அரசு பாழ்பட உமது செயலே காரணமாக அமையவேண்டுமா?

இந்த அரசு இந்தி எதிர்ப்பு உணர்ச்சியின் விளைவு—மூலதளம்

இந்த அரசு கவிழ்க்கப் படுவதாலே எது பலப்படும்· எவர் அரசாளவருவார், என்ன நிலை வளரும் என்பதனை எண்ணிப்பார்த்திட வேண்டாமா?

இந்திஎதிர்ப்பு உணர்ச்சிக்கு நான் மதிப்பளிப்பவன்· ஏனெனில் நானே அந்த உணர்ச்சி கொண்டவன்.

ஆனால் அந்த உணர்ச்சியை எடுத்துக்காட்டும் முறை எப்படி இருந்திடவேண்டும்? எந்த அரசு அந்த உணர்ச்சியின் வடிவமோ; அந்த அரசையே குலைத்திடத்தக்க விதமாகவா?

ராஜாஜி இந்தி எதிர்ப்பு உணர்ச்சியும் கிளர்ச்சியும் தேவை என்கிறார்! ஆனால் இந்தி ஆதரவாளர் செய்திட்ட அதே வன்முறையானதாக நமது கிளர்ச்சி இருத்தல் கூடாது — வன்முறை தேவையில்லை — தீது என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

மொழிக் கிளர்ச்சியிலே வெற்றிபெற வேண்டும் என்ற ஆர்வத்தை வரவேற்கிறேன், துணைநிற்கிறேன்.

ஆனால்; அது அமைதியான முறையில் இருந்திடவேண்டும்: கொதித்துக் கொப்பளித்து வன்முறையாக வடிவம் கொள்வதன் மூலமாக அல்ல.

மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண, நாம் சில நாட்களில் அல்லது சில மாதங்களில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வெற்றி பெற்றுவிட முடியும் என்ற அவசரம், நமக்குத் துணை செய்யாது.

தொடர்ந்து துவளாமல் நமது எதிர்ப்புணர்ச்சி இயங்கவேண்டும்.

வன்முறை புகுத்துவிட்டால், இது இயலாததாகி விடும்.

ஈராண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற கிளர்ச்சியின் போது, எந்தெந்த சமூக விரோத சக்திகள் நுழைந்து, நாசவேலைகளைச்செய்து, மாணவ சமுதாயத்தின்மீது பழியைப்போட்டதோ, அதே சக்திகள் இன்று அதே வேலையில் ஈடுபட்டிருக்கக் காண்கிறேன்.

அந்தச் சக்திகள் வெற்றிபெற இடம் தந்து விடுவோமானால் இந்தி எதிர்ப்பும் வெற்றிபெறாது. பண்பாடும் நிலைக்காது. கழக அரசும் நிலைக்காது. இதனை உணருவீர்களாயின் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை இப்போது நடத்தும் முறையில் நடத்துவது கூடாது என்ற முடிவுக்கு வருவீர்கள்.

இரயில் பெட்டிகளுக்கு நெருப்பு வைத்திடுவது, இந்தி ஆதிக்கத்துக்கு வைத்த நெருப்பு என்று கருதிக் கொள்ளாதீர்கள்.

அது நீங்கள் உருவாக்கிய தி மு. கழக அரசு அழித்திட வைத்திடும்

(12-ம் பக்கம் பார்க்க)

# குழந்தையாய்ப் பிறக்கவேண்டும்

[ துறவி ]

எத்தனையோ நூல்களை நான் படித்து விட்டேன்
எவ்வளவோ முயற்சிகளை எடுத்து விட்டேன்
நித்திரையில் இணைவிழியை மூடி டாமல்
நெடுங்காலம் எங்கெங்கோ தேடிச் சென்றேன்
இத்தரையில் உனைக்காணேன் இறைவா! ஆனால்
எங்கேனும் நீஇருப்பாய் என உணர்ந்து
புத்தியிலே பட்டதைஉன் சிந்த னைக்குப்
படைக்கின்றேன் அருள்புரிவாய் ஏற்றுக் கொண்டு.

விழிக்காமல் தூங்கட்டும் அறிவு, நெஞ்சில்
வளராமல் ஒடுங்கட்டும் உணர்ச்சி, பேசும்
மொழிஒலியில் அழியட்டும் கபடம், கண்ணில்
மருளுகின்ற மயல்பார்வை மங்கி டட்டும்
பழிபாவம் தீமை,நன்மை என்ற பேதம்
புரியாத புனிதமனம் ஒன்றை யேகி
விழைந்தெடுத்துத் தாயொருத்தி அணைத்துக்கொஞ்சும்
விளையாட்டுக் குழந்தையென மாற வேண்டும்.

சிறைபட்டுத் தாய்மடியில் கிடந்த போது
சிந்தனையில் தெளிவில்லை வருத்த மில்லை
கறைப்பட்ட மனமில்லை மயக்க மில்லை
கண்களுக்கு உலகங்கள் புரிவ தில்லை
துறைமுகத்துக் கப்பலைப்போல் இயக்க மற்றுத்
திகழ்ந்திருந்த இதயத்தில் சலன மில்லை
இறைவாநீ அருள்கூர்ந்து குழந்தை யாக
எனைமீண்டும் மாற்றிவிடு அதுவே போதும்!

எண்ணங்கள் வளரவைத்து வாழ்வைப் பற்றி
எத்தனையோ விதமாகப் புனைந்து காட்டிப்
பெண்மயக்கம் ஊட்டுகின்ற உணர்வும், செல்வம்
புரண்டுவந்து அளிக்கின்ற செருக்கும், கூடி
நண்பரெனத் தொடர்வாரின் பிணைப்பும் நல்கி
நெஞ்சுருக்கும் வாலிபமோ எனக்கு வேண்டாம்
கொண்டாடிப் பரவுகின்ற தாயொ ருத்திக்
குழந்தையென நான்மீண்டும் தவழ்ந்தால் போதும்!

புறப்பட்டுச் செல்கின்ற புனலைப் போலப்
புலன்வழியில் இழுபட்டு மோக'முற்று
நெறிகெட்டு முறையற்று அங்கும் இங்கும்
நிறைகெட்டுத் திரியவைக்கும் வாலி பத்தை
மறைத்துவிடு, மாற்றிவிடு இறைவா மீண்டும்
மதலைமொழி உதிர்க்கின்ற குழந்தை யாக்கி
அறமிகுந்த தாயொருத்தி மார்பின் மீது
அன்றாடம் துயிலவிடு மகிழ்ச்சி யோடு!

காதலிக்கும் பெண்மடியின் சொந்தம் கொஞ்ச
காலத்தில் திகட்டிவிடும் சலித்துப் போகும்
வேதனைக்கு இலக்காகி வாழ்ந்தால் நம்மை
வெறுத்துவிட்டு அன்னவளும் மறப்ப துண்டு
சீதஇதழ் முத்தமிட்டு அணைக்கும் தாயின்
சொர்க்கமடி யின்சொந்தம் மரண முற்று
வீதியிலே தோள்பயணம் ஏகு மட்டும்
விட்டுநமைப் பிரிவதில்லை! அழிவ தில்லை!

இதயத்தைப் பூட்டிவிட்டு, இதழில் மட்டும்
இமிழ்ச்சிரிப்பு அலைத்திரள மொழிந்து நெஞ்சில்
எதைஎதையோ நஞ்சாக எண்ணு வாரே
இருக்கின்றார் என்னருகில்: இறைவா வாழ்வில்
இதைப்போன்ற கள்ளமனம் பொதிந்தா ரோடு
இணைத்துவிட்டு இயக்கிவைத்து வருத்தி டாமல்
புதுக்குழந்தை யாகஎன்னை மீண்டும் மாற்றிப்
பழகவிடு தாயொருத்தி மடியின் மீது.

நிரந்தரமாய் நிச்சயமாய் எந்த நாளும்
நிலவாது தொடராது நமைப்பி ணைந்து
வருகின்ற மற்றவரின் சொந்தம், ஓர்நாள்
விலகிவிடும் முறிந்துவிழும், ஆனால் தாயின்
கருவினிலே துவங்குகின்ற சொந்தம் மூச்சுக்
காற்றூசல் நின்றபின்பும் நிலைத்து நிற்கும்
விரைவினிலே திலகவண்ணம் கலைந்து போகும்
வளைந்துள்ள கரும்புருவம் அழிவ துண்டோ?

மான்வளர்த்து மயில்வளர்த்து மழலைப் பேச்சு
மிழற்றுகின்ற கிளிவளர்த்து மகிழ்ந்தி டாமல்
பேன்வளர்த்துப் பார்ப்பதைப்போல் உலக மக்கள்
புழுத்துவிட்ட கருத்துகளைப் பேணு கின்றார்
கூன்விழுந்த நெஞ்சினராய் வளைந்து குன்றிக்
கூழுக்கு உயிர்மூச்சை நீட்டு கின்றார்
நான்மீண்டும் குழந்தையென மாறி விட்டால்
நிச்சயமாய் இவ்வாறு வாழேன் அன்றோ?

புனிதமில்லை உண்மைஇல்லை எதிலும், கண்கள்
படுகின்ற இடமெல்லாம் அறத்தின் சாவு
மனிதநெஞ்சில் இருப்பதெல்லாம் பாழ்இ ருட்டு
முட்காடு பாலைமணற் போன்ற எண்ணம்
இனிமைஒலி இசைக்காமல் வீணை மீட்டி
எழுப்புகின்றார் எல்லோரும் வெற்றுச் சப்தம்!
எனைமீண்டும் குழந்தையென மாற்றி விட்டால்
இக்கொடுமை தனில்வீழ்ந்து துவளேன் அன்றோ?

உடல்வளர்ந்து மனம்வளர்ந்து முதிர்வ தாலே
உலகத்தை பலவழியில் நோக்கு கின்றோம்
படருகின்ற வேட்கையிலே கருகு கின்றோம்
பேராசைக் கானலின்பின் ஓடு கின்றோம்
இடர்பயிரைச் சாகுபடி செய்து நித்தம்
எங்கெங்கோ பயணத்தை மேற்கொள் கின்றோம்!
மடிமீது தவழுகின்ற குழந்தை யாக
மாறிவிட்டால் இதனையெல்லாம் அறியோம்அன்றோ?

வானத்து நிலவுக்கு வளர்ச்சி வேண்டும்
விம்மியெழும் ஆற்றுக்கு வளர்ச்சி வேண்டும்
தானியத்தைச் சுமக்கின்ற கதிர்நெல் லுக்குத்
தலைசாயும் நாள்வரைக்கும் வளர்ச்சி வேண்டும்
ஆனமட்டும் இறைஞ்சுகிறேன் இறைவா, இந்த
அலைவாழ்வில் எனக்குமட்டும் வளர்ச்சி வேண்டாம்
நானிங்கு மறுபடியும் குழந்தை யாகி
நேசமிகு தாய்மடியில் படர்ந்தால் போதும்!

# மூன்று தெய்வங்கள்

**நீ. த. வே.**

"அப்பா! தம்பி தெருவுக்குப் போகிறான்!" என்று என் மகள் ஓடிவந்து சொன்னதும் எழுந்து சென்றேன். வாயிற்படியை விட்டு இறங்கிக் கொண்டிருந்த குழந்தையிடம், 'தெருவில் இறங்கக் கூடாது, வண்டி வரும்" என்று சொல்லி அவனைத் தூக்கிக்கொண்டேன். தூக்கிக்கொண்டு உள்ளே திரும்பாமல் வெளியிலேயே சிறிது நேரம் நின்றிருந்தேன். எதிர் வீட்டிலிருந்து ஒருவர் வெளியே வந்தார். வந்தவருக்கு ஒரு கால் ஊனம் என்பதும் அதனால் மரத்தாலாகிய காலைப் பொருத்திக்கொண்டு நடக்கிறார் என்பதும் பார்த்த உடனே எனக்குத் தெரிந்துவிட்டது. அவர் என்னை உற்றுப் பார்த்தார். நானும் அவரைப் பார்த்தேன். "என்னைத் தெரிகிறதா?" என்று அவர் புன்முறுவலோடு கேட்டார். "தெரியவில்லையே! என்னை உங்களுக்குத் தெரியுமா?" என்று நான் வியப்போடு கேட்டேன். "இரண்டு நாட்களுக்கு முன் எதிர் வீட்டுக்கு நீங்கள் குடிவந்ததும் வெளியில் மாட்டப்பட்ட பெயர்ப் பலகையைப் பார்த்து நீங்களாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தேன். நீங்களேதான் என்பது இப்போது உங்களைப் பார்த்தவுடன் தெரிந்துவிட்டது." என்று அவர் மேலே சொன்னது என் வியப்பை மிகுதியாக்கியது. "உங்கள் வீட்டிலும் இப்படி ஒரு பெயர்ப் பலகை இருந்தால் நீங்கள் யார் என்பதை நானும் தெரிந்து கொண்டிருப்பேன்! பெயர்ப் பலகை இல்லாததால் தெரிந்து கொள்ள முடியவில்லை! நீங்கள்தான் சொல்ல வேண்டும். நீங்கள் யார் என்று எனக்கு தெரியவில்லை." என்றேன். "நன்றாக நினைவுபடுத்திப் பாருங்கள், தெரியும்" என்று அவர் சிரித்துவிட்டு "அலுவலகத்துக்கு நேரமாகிவிட்டது. மாலையில் திரும்பி வந்ததும் ஓய்வாகப் பேசலாம்!" என்று தம் வீட்டு வாயிற்படியை விட்டு மெல்ல இறங்கி நடந்து சென்றார்.

செயற்கையாகப் பொருத்தப்பட்ட ஒரு காலை உடையவராக இருந்ததால் சரியாக நடக்க முடியாமல் அவர் சாய்ந்து சாய்ந்து நடந்து சென்றதையே பார்த்துக்கொண்டிருந்தேன். ஏதேனும் ஒரு வண்டி வைத்துக்கொண்டு செல்லக் கூடாதோ. இப்படி நடந்து செல்கிறாரே என்று இரக்கத்தோடு எண்ணினேன். அவருக்கும் என்னுடைய வயதுதான் இருக்கும். ஆனால் அவர் என்னைப்போல் மெலிந்திருக்கவில்லை. திடமாக இருந்தார். அவர் தம் தலையை மொட்டையடித்துக் கொண்டிருந்ததால் அவரை எனக்கு அடையாளம் தெரியவில்லையோ என்று நினைத்தேன். மொட்டை அடித்துக் கொண்டிருந்தால் என்ன, கால் ஊனமாகி விட்டிருந்தால் என்ன, முகச் சாயல் அப்படியே தானே இருக்கும்? ஆனால் அவருடைய முகம் எனக்கு அறிமுகமான ஒன்றாகத் தெரியவில்லையே என்று எண்ணியவாறே உள்ளே திரும்பினேன். குழந்தையை என் மனைவியிடம் விட்டு விட்டு என் அறையில் வந்து அமர்ந்தேன்.

"நன்றாக நினைவுபடுத்திப் பாருங்கள் தெரியும்!" என்று புதிர் போட்டுவிட்டுச் சென்ற அந்த வேடிக்கையான மனிதர் யார் என்பதைக் கண்டுபிடிக்க முயன்று பார்த்தேன். என் முயற்சியில் எனக்கு வெற்றி கிடைக்கவில்லை. பின்னர் உணவருந்தியபோது என் மனைவியிடம் "எதிர் வீட்டில் இருப்பவர்களைப் பற்றி உனக்கு ஏதேனும் தெரியுமா? என்று வினவினேன். எதிர் வீட்டில் வயதான ஒரு பெரியம்மா இருக்கிறார்கள். அவர்களோடு நேற்று பேசியபோது அவர்களுடைய மகன் வருமான வரி அலுவலகத்தில் பணியாற்றுவதாகச் சொன்னார். தாயும், மகனுமாக இருவர்தான் எதிர் வீட்டில் இருக்கிறார்கள். வேறு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை" என்றாள் என் மனைவி. 'எதிர் வீட்டிலிருப்பவரின் பெயர் என்னவென்று தெரியுமா?" என்றேன். "அதை நான் தெரிந்து கொள்ளவில்லை. எதற்காக கேட்கிறீர்கள்?" என்றாள் அவள். "எதிர் வீட்டிலிருப்பவர் அலுவலகத்துக்குப் புறப்பட்டுச் சென்றபோது என்னைக் கண்டு பேசினார். தன்னை யார் என்று தெரிகிறதா என்று கேட்டார். நன்றாக நினைவுபடுத்திப் பாருங்கள் தெரியும் என்று சொல்லி மாலையில் ஓய்வாகப் பேசலாம் என்று போய்விட்டார். அதனால்தான் உனக்குத் தெரியுமா என்று கேட்டேன். வருமான வரி அலுவலகத்தில் பணியாற்றும் எவரும் எனக்கு அறிமுகமானவராக இல்லையே!" என்றேன். "அவருடைய பெயரை வேண்டுமானால் பிறகு போய்க் கேட்டுத் தெரிந்து வருகிறேன்" என்று என் மனைவி சொல்ல, 'வேண்டாம். மாலையில் அவரைக் கண்டு பேசுகையிலேயே தெரிந்து கொள்கிறேன்" என்று நான் சொன்னேன்.

"எதிர் வீட்டில் இருப்பவர் யாராக இருக்கும்? என்ற கேள்வி பகல் முழுவதும் அடிக்கடி என் நெஞ்சில் எழுந்த வண்ணமே இருந்தது. ஆனால் அந்தக் கேள்விக்கான விடைதான் கிடைக்கவில்லை அவர் யார் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலில் வழக்கமாக மாலையில் வெளியே உலவச் செல்வதையும் விட்டு, அவர் வரவுக்காகக் காத்திருந்தேன். ஆறு மணிக்கு அவர் வீடு வந்து சேர்ந்தது தெரிந்ததும் நானே அவர் வீட்டுக்குச் சென்றேன்,

"வாருங்கள்" என்று என் பெயரையும் சேர்த்துச் சொல்லி வரவேற்று அவர் என் கையைப் பற்றிக் குலுக்கினார். குலுக்கிவிட்டு உட்காரச் சொன்னார். "என்னை யார் என்று இன்னும் தெரியவில்லையா? இதோ வருகிறேன்!" என்று உள்ளே சென்றார்! தாம் யார் என்பதை இந்த மனிதர் எளிதில் சொல்லமாட்டார்போல் இருக்கிறது. அவரே எப்போது சொல்கிறாரோ சொல்லட்டும் என்ற எண்ணத்தில்

அந்த அறை முழுவதும் என் பார்வையைச் செலுத்தினேன். அறையின் ஒரு பக்கத்துச் சுவரில் இருந்த மூன்று படங்கள் என் கவனத்தைக் கவர்ந்தன. அந்த மூன்றுமே இளம் பெண்களின் படங்களாக இருந்தன. உலகத்துச் சான்றோர்களின் படங்களை நாட்டுத் தலைவர்களின் படங்களை, உற்றார் உறவினர் நண்பர்களின் படங்களைத்தான் யாரும் வீட்டில் வைத்திருப்பார்கள். ஆனால் இந்த மனிதர் மூன்று இளம் பெண்களின் படங்களை வைத்திருக்கிறாரே!

யார் இந்தப் பெண்கள்? இந்தப் பெண்களின் படங்களை இவர் ஏன் வைத்துக்கொண்டிருக்கிறார்? அதுவும் எல்லோர்க்கும் தெரியும் வகையில் பெரிதாகச் சுவரில் மாட்டி வைத்திருக்கிறாரே! என்று நான் வியந்துகொண்டிருக்கையிலேயே அவர் திரும்பிவந்தார். வந்து உட்கார்ந்து என்னை நோக்கிச் சிரித்தார். நானும் சிரித்தேன். அவருடைய தாய் எங்கள் இருவருக்கும் காபி கொண்டுவந்து கொடுத்தார். 'நீங்கள் யார் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் நான் காபி குடிக்க மாட்டேன்'' என்றேன். ''நான்தான் சுந்தரேசன். இப்போது தெரிகிறதா?'' என்றார் அவர். 'இன்னும் தெரியவில்லை'' என்றேன். 'அடியோடு மறந்துவிட்டீர்களோ, ஆறும் வகுப்பில் உங்களோடு படித்த மாணவன் நான். இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்துகொண்டிருக்கையில் எங்கள் ஊரைவிட்டு வந்து உங்கள் ஊர்ப் பள்ளியில் சேர்ந்து படித்தவன். ஒரே ஓர் ஆண்டுதான் உங்களோடு படித்தேன். பிறகு எங்கள் ஊருக்கே திரும்பிச் சென்றுவிட்டேன். உங்களுக்கு நினைவில்லையா?'' என்றார். அந்த விவரத்தை அறிந்த பின்னரே அந்த நண்பரை எனக்குத் தெரிந்தது. ''நீங்கள் படிக்கும்போது ஒல்லியாக இருந்தீர்கள். அழகாக மயிர் வளர்த்து வாரிவிட்டுக்கொண்டிருந்தீர்கள். இப்போதோ பெருத்துவிட்டிருக்கிறீர்கள். மொட்டை அடித்துக்கொண்டிருக்கிறீர்கள். அதனால்தான் உங்களை அடையாளம் தெரியவில்லை. ஆமாம். நீங்கள் என்னோடு படித்தபோது நன்றாக இருந்தீர்களே! ஓட்டப் பந்தயங்களில் எல்லாம் முதல் பரிசு பெறுவீர்களே! எப்போது உங்களுக்கு இந்தக் கால் ஊனம் ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது?'' என்று கேட்டேன். ''காபி குடியுங்கள்'' எல்லாம் சொல்கிறேன் என்றார்.

காபி குடித்தபின் அவர்தம் கதையைச் சொன்னார். ஆறும்வகுப்பில் என்னுடன் படித்துவிட்டுச் சென்றதிலிருந்து தொடங்கி இன்று வருமானவரி அலுவலகத்தில் பணியாற்றிக்கொண்டிருப்பதுவரை எல்லாவற்றையும் சொன்னார். ஒன்பதாம் வகுப்பு மாணவனாக இருக்கையில் துடுக்கோடு ஆடிய ஆட்டம் ஒன்றில் எப்படித் தன் முழங்கால் ஒன்றை இழக்க நேர்ந்தது என்பதையும் சொன்னார். பின்னர் என்னைப்பற்றிய விவரங்களையெல்லாம் கேட்டார். நானும் சொன்னேன்.

..'நீங்கள் இன்னும் திருமணமே செய்துகொள்ளவில்லையா?'' என்று நான் கேட்க. 'இல்லை'' என்றார் அவர். ''ஏன்?'' என்றேன். ''எனக்குப் பிடிக்கவில்லை'' என்றார். 'பிடிக்கவில்லையா'' என்று நான் மெல்ல நகைத்துவிட்டு. சுவரில் மாட்டப்பட்டிருந்த பெண்களின் படங்களைப்பார்த்தேன். அவருடைய பார்வையும் அந்தப் படங்களின் பக்கம் திரும்பியது. ''திருமணம் செய்து கொள்ளப் பிடிக்காதவர் இந்தப்படங்களை...'' என்று நான் கேட்க நினைத்ததைக் கேட்காமல் நிறுத்தினேன். 'ஏன் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்றுதானே கேட்கிறீர்கள்? இந்த மூன்று பெண்களும் என் நெஞ்சில் இடம்பெற்று என் வாழ்க்கைத் துணைவியாக முயன்று தோற்றவர்கள். அவர்கள் உயிரோடிருக்கையில் அவர்களில் ஒருத்திக்கும் என் நெஞ்சில் இடம் தராமல் இருந்த நான், இன்று இம்மூவருக்குமே என் நெஞ்சில் இடம் தந்து போற்றுகிறேன். இந்த மூவரையும் மூன்று தெய்வங்கள்போல் எண்ணி மதிக்கிறேன். அதனால்தான் இந்தப் படங்கள் இங்கே உள்ளன!'' என்றார் அவர்.

அந்தப் பெண்களைப்பற்றிய கதையையும் அவரே சொல்லட்டும் என்று அமைதியாக இருந்தேன். 'இவர்களைப்பற்றியும் சொல்கிறேன்'' என்று அவர் தொடர்ந்தார்.

''கால் முறிந்து நொண்டியாகும் வரை படிப்பில் அக்கறை இல்லாமல் விளையாட்டிலேயே பொழுதைப் போக்கி வந்த நான் அந்த விபத்துக்குப் பின்னர்தான் படிப்பில் கவனம் செலுத்தத் தொடங்கினேன். அதனால் நானும் உங்களைப்போல் வகுப்பில் முதல் மாணவனாகத் திகழலானேன். பத்தாம் வகுப்பை முடிக்கும் தறுவாயில் என் தந்தை இறந்துவிட அதனால் குடும்பத்தின் வருவாய் குறைந்தது. பத்தாம் வகுப்பு இறுதித் தேர்வில் எல்லாப் பாடங்களிலும் அதிகமான மதிப்பெண்களைப் பெற்றிருந்தும் கல்லூரியில் சேரமுடியாத நிலையில் இருப்பதைப்பார்த்து சந்திரன் என்னும் என் நண்பன் ஒருவன் என் கல்லூரிக் கல்விக்கான செலவு முழுவதையும் ஏற்க முன்வந்தான், தன்னோடு ஒரே வகுப்பில் என்னையும் சேரச்செய்தான். அந்த நண்பன் இல்லையென்றால், அந்த நண்பனின் வீட்டார் மனமுவந்து எனக்குப் பொருளுதவி செய்யவில்லை என்றால் நான் கல்லூரிப் பட்டம் பெற்றவனாகியிருக்கவே முடியாது.

''சந்திரனின் குடும்பம் பெரிய செல்வக் குடும்பம். அந்தக் குடும்பத்தில் மூத்த மகனாகப் பிறந்து செல்வமாக வளர்ந்தவன் சந்திரன். அவனும் அவனுடைய தங்கையர் இருவருமாக அந்த வீட்டில் மூன்று குழந்தைகள் இருந்தனர். அந்தக் குழந்தைகளிடம் அன்பு காட்டுவது போலவே அந்தப் பெற்றோர் என்னிடமும் அன்பு காட்டினர். உயர்நிலைப்பள்ளி மாணவனாக இருந்ததிலிருந்தே நான் அவர்களுடைய வீட்டிற்கு அடிக்கடிச்சென்று வருவேன். சந்திரனோடும் அவன் தங்கையரோடும் சிரித்துப் பேசி விளையாடுவேன். அவர்கள் என்னிடம் எவ்வளவு அன்பு காட்டுகிறார்களோ அவ்வளவு அன்பை நானும் அவர்களிடம் காட்டுவேன். அந்தக் குடும்பத்தோடு நான் பழகிய நாட்கள் என் வாழ்நாளில் என்றுமே மறக்க முடியாத நாட்களாகும்.

''சந்திரனின் தங்கையரில் மூத்தவள் பெயர் சகுந்தலா. இளையவள் பெயர் சாந்தா. சகுந்தலாவும் சாந்தாவும் சந்திரனுக்கு உடன்பிறந்த தங்கைகள் என்றால் அவர்கள் எனக்கு உடன்பிறவாத தங்கைகள் என்றுதான் நான் அவர்களிடம் அவ்வளவு அன்பு கொண்டிருந்தேன். நான் நொண்டி என்பதால் அவர்களுடைய பெற்றோர் இரக்கம் கொண்டு என்பால் பேரன்புகாட்டியதுபோலவேதான் அந்தப் பெண்களும் என்னிடம் பேரன்பு காட்டத் தொடங்கியிருக்க வேண்டும். அந்தப் பேரன்பு அவர்கள் வளரவளரக் காதலாக மாறக்கூடும் என்று நான் கனவிலும் கருதவில்லை. என்னுடைய நிலை என்ன? அவர்களுடைய நிலை என்ன? மேலும் நான் ஒரு நொண்டியல்லவா? என்னை மனமார விரும்பித் திருமணம் செய்து கொள்ள எந்தப் பெண்ணும் முன்வர

மாட்டாள். ஆகவே எந்தப் பெண்ணையும் திருமணம் செய்துகொள்வதுபற்றிய எண்ணத்திற்கே என் நெஞ்சில் இடம்தராமல் இருந்து வந்தேன். காலம் கடந்த பின்னர்தான் சகுந்தலா என்மீது கொண்டிருந்த காதலை அறிந்தேன். அறிந்து மனம் நொந்தேன். தங்கையாக எண்ணிப் பழகியதை அந்தப் பெண் தவருகக் கருதி காதல் கொண்டுவிட்டாளே என்று வருந்தினேன்.''

''சகுந்தலா என்மீது கொண்ட காதலை யாருக்கும் தெரியாமல் தன் நெஞ்சிலேயே வைத்துக்கொண்டிருந்திருக்கிருள். சந்திரனுக்கோ, சாந்தாவுக்கோகூட அது தெரியாத அளவுக்கு அவ்வளவு எச்சரிக்கையாக இருந்து வந்திருக்கிருள். அவளாக சொல்லவில்லை என்ருல் அது எனக்கும் தெரிந்திருக்காது.

அவளுடைய திருமண முயற்சியில் பெற்ருேர் ஈடுபடத் தொடங்கியதும்தான் இனியும் தன் விருப்பத்தை தன் நெஞ்சோடு வைத்திருக்கக்கூடாது என்று என்னிடம் அவள் தன் விருப்பத்தைக் குறிப்பாகச் சொன்ஞள். என்னிடம் மட்டுமே சொன்ஞள். நான் அவளுடைய கணவனுகத் தகுதியற்றவன் என்பதை விளக்கிச் சொன்னேன். நான் அவளிடம் காதல் கொண்டு பழகவில்லை என்பதையும் சொன்னேன். ''என்னை உன் உடன் பிறவாத அண்ணனுக கருதி உன் எண்ணத்தை விட்டுவிடு அம்மா!'' என்று வேண்டினேன். 'நாளையிலிருந்து உங்கள் வீட்டுக்கு வருவதையும் நான் கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக் கொள்கிறேன்'' என்று கூறினேன். எல்லாவற்றையும் பொறுமையாகக் கேட்ட அந்தப் பெண் ''நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்து செல்வதை மட்டும் நிறுத்திவிடாதீர்கள் அண்ணு! எப்போதும் போலவே வந்து செல்லுங்கள். எப்போதும்போலவே கலகலப்பாகப் பேசுங்கள். நீங்கள் வரவில்லையென்ருல், நீங்கள் அடிக்கடி வருவதை நிறுத்திக்கொண்டால் என்ஞல் இந்த வீட்டில் இருக்கவே முடியாது!'' என்று கண்கலங்கிச் சொன்ஞள். அவள் கண்ணீரைக் கண்டு என் கண்களும் கலங்கின. ''இன்று நீ என்னிடம் உன் எண்ணத்தைச் சொல்லியதையோ நான் என் மனம் திறந்து உன்னிடம் சொல்லியதையோ என்றுமே யாருக்குமே கூறக்கூடாது. அப்படி ஓர் உறுதியை நீ எனக்குத் தரவேண்டும்'' என்றேன். ''நீங்களும் இதனை யாருக்கும் சொல்லாமல் இருப்பதோடு நீங்கள் எங்கள் வீட்டிற்கு வந்து செல்வதிலோ என்னோடு பேசுவதிலோ எந்தவித மாற்றத்தையும் காட்டக்கூடாது.'' என்ருள் அவள். நானும் அவள் வேண்டுகோளுக்கு இணங்கிச் சரி என்றேன். அவளும் என் வேண்டுதலுக்கு இணங்கிச் ''சரி'' என்ருள்.

''அன்று அவளுடைய வாயிலிருந்து வெளிப்பட்ட 'அண்ணு!' என்னும் சொல்லைக் கேட்டு அவள் என்னைத் தன் அண்ணனுகக் கொண்டுவிட்டாள். இனி அவள் பெற்ருேர் பார்த்துச் செய்துவைக்கும் திருமணத்திற்கு உடன்படுவாள் என்று மனமார நம்பினேன். ஆனுல் அவள் அப்படி உடன்படவில்லை. 'எனக்குத் திருமணம் வேண்டாம் ஏதாவது ஒரு வேலைக்குப் போகிறேன்'' என்று அவள் பெற்ருேரிடம் சொல்லிப் பார்த்திருக்கிருள். அவர்களோ அவளை வேலைக்கு அனுப்பவும் விரும்பவில்லை.

அவளுக்குத் திருமணம் செய்து வைக்காமல் இருக்கவும் விரும்பவில்லை. அவளுடைய விருப்பத்திற்கு மாருக அவர்கள் செயலில் இறங்கினர். அவளுக்கென்று ஒரு நல்ல இடம் பார்த்தனர். பிள்ளையின் பெற்ருேரும் பெண்ணை வந்து பார்த்து பிடித்திருப்பதாகக் கூறினர். பிள்ளை வந்து பெண்ணைப் பார்ப்பதற்கான நாள் ஒன்று குறிப்பிட்டு பிள்ளையை அனுப்புவதாகச் சொல்லிச் சென்றனர். தன் நெஞ்சில் எனக்குக் கொடுத்த இடத்தை வேறு ஒருவருக்கும் கொடுக்க விரும்பாத அந்தப் பெண் சகுந்தலா, பிள்ளை வந்து பார்க்க இருந்த முன்ஞளே கண்ணை மூடிவிட்டாள். மாரடைப்பால் இறந்துவிட்டதாக எல்லோரும் சொல்கிருர்கள். எல்லோரும் நம்புகிருர்கள். ஆனுல் அதை என்ஞல் நம்பமுடியவில்லை. இயற்கையாக சாவு அவளுக்கு வந்திருக்காது. செயற்கையாகவே அவள் சாவைத் தேடிக்கொண்டிருப்பாள் என்றுதான் எண்ணுகிறேன். அவள் என்னைக் காதலித்ததோ அவள் காதலை நான் ஏற்க முடியாமற் போனதோ—யாருக்கும் தெரியாது. ஆகையால் அவள் சாவைப்பற்றி யாருக்கும் சந்தேகம் தோன்றவில்லை. ஆனுல் அந்தச் சந்தேகம் என்னைவிட்டு இன்னும் நீங்கவில்லை'' என்று சுந்தரேசன் படத்தின் பக்கமாகத் திரும்பி, ''அதோ அந்த முதற் படத்தில் இருப்பவள்தான் சகுந்தலா'' என்ருர். அதற்கு மேல் சிறிது நேரம் அவரால் பேசமுடியவில்லை. நானும் பேசாமல் இருந்தேன்.

''அந்தத் தெய்வத்திற்குப் பக்கத்தில் இருக்கும் தெய்வம்தான் அவளுடைய தங்கை சாந்தா.'' என்றுஅவர் மீண்டும் பேசத் தொடங்கிஞர். அக்காவின் காதல் தோல்விபற்றித் தெரிந்திருந்தால் தங்கை அந்த வழியில் சென்றிருக்க மாட்டாளே என்று என் மனதிற்குள் சொல்லிக் கொண்டே அவர் சொல்வதைக் கேட்டேன்.

''சகுந்தலாவின் மறைவால் பெருந்துயரத்தில் ஆழ்ந்து தவித்த சந்திரனின் குடும்பத்தார்க்கு ஆறுதல் சொல்லித் தேற்றுவற்கென்று முன்னினும் பலமுறை அவர்களுடைய வீட்டிற்குச் சென்றேன். சகுந்தலாவின் பிரிவு சாந்தாவையே மிகுதியாகத் தாக்கியிருந்ததால் அவளுக்குத்தான் நான் மிகுந்த ஆறுதல் சொல்லவேண்டியிருந்தது. என்னைக் கண்டால் மட்டுமே சாந்தா தன் கண்களைத் துடைத்துக்கொண்டு பேசுவாள். என்னோடு பேசும்போது மட்டுமே அவள் முகத்தில் நகையரும்பும். ''நீங்கள் எதிரில் இருந்தால்தான் அக்காவை மறந்திருக்க முடிகிறது. நீங்கள் எங்கள் வீட்டிலேயே தங்கிவிடுங்களேன்.'' என்று சாந்தாவும் சொல்வாள். அவளுடைய பெற்ருேரும் அப்படியே சொல்வர். சாந்தா அப்படி சொல்லியதற்குக் காரணம் இளமையிலிருந்து அவள் என்னோடு பழகியதால் கொண்டுவிட்ட ஒருவகைப் பாசம் என்றுதான் நான்நினைத்தேன். அண்ணன் தங்கை என்ற பாசம் எங்களிடையே அந்த அளவுக்கு வேறூன்றியிருப்பதாகத்தான் கருதினேன். அந்தக் கருத்தில்தான் அன்போடு பேசினேன், பழகினேன். ஆனுல் அவளும் தன் அக்காவைப்போலவா என்னிடம் காதல்கொள்ள வேண்டும்?

''சாந்தா தன் காதலை என்னிடம் சகுந்தலாவைப்போல் நேரில் தெரிவிக்கவில்லை. கடித மூலம் எழுதித் தெரிவித்தாள். 'இன்று உங்களுக்கு ஒரு புத்தகம் தரப்போகிறேன். படிப்பதற்கல்ல. புரட்டிப் பார்ப்பதற்கு! இப்போதல்ல! நீங்கள் வீட்டுக்குப் போகும்போது! அதை நீங்கள் உங்கள் வீட்டில் தனியாக இருக்கையில்தான் புரட்டிப் பார்க்கவேண்டும்!''

என்று அவள் சிரித்துக்கொண்டே கூறினுள். அவளுக்கே உரிய கள்ளங் கபடமற்ற குழந்தைத் தன்மையோடு அவள் விளையாடுகிருள் என்றே அப்போது நினைத்தேன். அவள் கூறியபடியே அவள் கொடுத்த புத்தகத்தை பிரிக்காமல் வீட்டிற்கு எடுத்துச் சென்று தனியாக இருந்து புரட்டிப்பார்த்தேன். புத்தகத்தில் பார்ப்பதற்குப் படங்கள் ஏதும் இல்லை. மடித்து வைக்கப்பட்ட ஒரு கடிதம் இருந்தது. சாந்தா எனக்கு எழுதியிருந்த கடிதம் அது. மிகவும் சுருக்கமாகவே இருந்தது. அன்புள்ள மாமா அவர்களுக்கு என்று தொடங்கி •எப்போதோ உங்களுடையவளாகிவிட்ட சாந்தா'' என்று முடிக்கப்பட்டிருந்தது. இடையே சில வரிகளில் அவள் தன் காதல் முழுவதையும் கொட்டி வைத்திருந்தாள். அதைப்படித்து நான் அதிர்ச்சிக்குள்ளானேன். என்ன செய்வதென்றே எனக்குத் தோன்றவில்லை. மறுநாள் முழுவதும் அவள் வீட்டுக்குச் செல்லாமல் இருந்தேன். நான் செல்லாமல் இருக்கவே சாந்தா என்னைத் தேடிக்கொண்டு எங்கள் வீட்டுக்கு வந்துவிட்டாள்.

''வந்தவள் என்னைக் கண்டு அழுதாள். நானும் அழுதேன் • ஏன் இன்று எங்கள் வீட்டுக்கு வரவில்லை'' என்றுள். ''வேலை இருந்தது என்றேன்.'' ''அப்படி என்ன வேலை?'' என்றுள். ''ஒன்றுமில்லை'' என்றேன். ''நான் கொடுத்த புத்தகம் எங்கே?'' என்றுள். எடுத்துக் கொடுத்தேன். ஆவலோடு அதை என் எதிரிலேயே புரட்டிப் பார்த்தாள். அவள் கடிதத்துக்கு மறுமொழியாக நான் ஒரு கடிதம் எழுதி வைத்திருப்பேன் என்று பார்த்தாளோ என்னவோ. அப்படி ஏதும் இல்லாததைக் கண்டு மீண்டும் கண் கலங்கினுள், அதற்குள் வெளியே சென்றிருந்த என் அன்னை வந்துவிடவே நாங்கள் எதையும் பேசிக்கொள்ளவில்லை.

''வருகிறேன்'' என்று அவள் விடைபெற்றுச் சென்றுவிட்டாள்.

''சென்றவளிடமிருந்து மூன்ருவது நாள் காலை என் முகவரிக்கு ஒரு கடிதம் அஞ்சலில் வந்து சேர்ந்தது. அதில் அவள் ''என்னை உங்களுக்குப் பிடிக்கவே இல்லையா? என்னிடம் உங்களுக்கு கொஞ்சமும் அன்பே இல்லையா? என்னை ஏன் வெறுக்கிறீர்கள்? உங்களுக்கு வெறுப்பு ஏற்படும்படியாக நான் என்ன தவறு செய்துவிட்டேன்? நீங்கள் ஏன் என் கடிதத்திற்கு மறுமொழி எழுதவில்லை?'' என்றெல்லாம் பல கேள்விகளைக் கேட்டிருந்தாள். • வேறு எந்தக் கேள்விக்கு உங்களிடமிருந்து பதில் இல்லை என்றுலும் ஒரே ஒரு கேள்விக்கு மட்டுமாவது பதில் எழுதுங்கள். அல்லது நேரில் என்னிடம் சொல்லுங்கள். நீங்கள் என்னை உங்கள் வாழ்க்கைத் துணைவியாக ஏற்க விரும்புகிறீர்களா? இல்லையா? உங்கள் பதிலைப் பார்த்து நான் ஒரு முடிவு செய்ய இருக்கிறேன். வரும் திங்கட்கிழமை காலை ஏழு மணிக்குள் உங்கள் பதிலை கடித மூலமோ, நேரிலோ தெரிவியுங்கள். உங்களிடமிருந்து ''இல்லை'' என்ற பதில் வந்தாலோ அல்லது பதிலே வராவிட்டாலோ திங்கட்கிழமை காலை ஏழு மணிக்கு நான் ஒரு முடிவை மேற்கொண்டு விடுவேன். அது பின்னர் மாற்ற முடியாததாக இருக்கும். அந்த முடிவு என்ன என்பதை இப்போது நான் சொல்ல விரும்பவில்லை —அந்த முடிவு கோழைத்தனமாக இருக்காது.

உயிரை மாய்த்துக் கொள்வதாக இருக்காது என்பதை மட்டும் இப்போது சொல்லி விடுகிறேன்.'' என்று எழுதியிருந்தாள்.

•' நான் அந்தக் கடிதத்திற்கு என்ன பதிலை எழுதுவேன்? என்ன பதிலைச் சொல்வேன்? சாந்தாவை நான் வெறுப்பதற்கு காரணமே இல்லை. அவளிடம் எனக்கு அன்பு இல்லாமல் இல்லை. அவளை எனக்குப் பிடிக்காமல் இல்லை. ஆனுல் நான் அவளுடைய கணவனுகத் தகுதியுடையவன்தானு? குறையற்ற ஒரு பெண்ணுக்கு, குறையுடைய நான், ஏழையாகிய நான். எந்த வகையில் பொருத்தமானவன்? என்பதை எண்ணி எண்ணி மனம் கலங்கினேன். ஒன்றும் பதில் எழுதவில்லை என்றுல் என்ன முடிவு எடுத்து விடுவாளோ என்று அஞ்சினேன். ஏற்கனவே சகுந்தலாவின் காதலை மறுத்து அவள் உயிர் துறக்க காரணமாக இருந்தது போதாதா?

இவளுடைய காதலையும் துறந்து இவளையுமா ஏமாற்ற நிலைக்குத் தள்ளுவது? என்று பலவாறு நினைத்துப் பார்த்தேன். திங்கட்கிழமை காலை ஆறு மணி வரை ஒரு முடிவுக்கும் வராமல் தவித்துக்கொண்டிருந்த என் மனம் அதற்குப் பின் ஒரு நல்ல முடிவுக்கு வந்தது. சாந்தாவை என் வாழ்க்கைத் துணைவியாக ஏற்கத் துணிந்தேன், அவளை எல்லையற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்தவல்ல அந்தச் செய்தியை அவளிடம் நேரிலேயே சென்று ஏழு மணிக்கெல்லாம் சொல்லிவிடப் புறப்பட்டேன். வழியில் எதிர்ப் பாராமல் காண நேர்ந்த பழைய நண்பர் ஒருவரோடு சிறிது நேரம் பேசிவிட்டுச் சென்றதால் நான் சாந்தாவின் வீட்டை

---

# மதிப்புரை

---

## கறிவேப்பிலை

**ஆசிரியர்: கோ. கலைவேந்தன்.**

கிடைக்குமிடம்:-

முத்தமிழ்ப் பண்ணை, மணல்மேடு,
மாயூரம் வட்டம்.
விலை ரூ. 2—00.

நாலைந்து கதாபாத்திரங்களைப் பின்னி கதை ஒட்டப்படுகிறது. பாத்திரங்களின் பெயர்கள் யாவும் தூய தமிழில் அழைக்கப்படுகிறது. நூலெங்கும் நல்லபல தமிழ்ச் சொற்கள் தூவப்பட்டிருக்கிறது. கதாசிரியரின் தமிழ்ப்பற்று, நூலில் அள்ளித் தெளிக்கப்பட்டிருக்கிறது. நடைமுறைத் தமிழும் தூய தமிழும் கலந்து கொடுத்திருப்பதனுல் சில இடங்களில் படிக்க விரசமாகக்கூட இருக்கிறது.

கதையின் தொடக்கத்தைப் படித்தவுடனேயே ஆசிரியர்நம்மை எங்கோ ஒரு திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த துப்பறியும் உலகுக்கு அழைக்கிருர் என்று எண்ணத் தோன்றுகிறது. படிப்பவர்கள் குழப்பமடையவேண்டும் என்பதற்காகவே ஆசிரியர், கதையின் இறுதியை முதலில் தொடங்கி, பின்னர் முன் கதை இதுதான் என்று தொடுத்துக் காட்டி பின்னுல் முடித்திருக்கிருர், நாடகபாணியைப்போல; புதுமை தான்!

புலவர் இளவழகனுர் என்பவர்—பகலவனுக்குக் கறிவேப்பிலையாகிருர். பொற்சிலை என்பவள் எழிலி என்பவளுக்குக் கறிவேப்பிலையாகிருள். மொத்தத்தில் ஏறிவந்த சமூகத்தை எட்டி உதைக்கின்ற இயல்பு இந்த மாந்தர்க்கிடையே எப்படி எப்படி வளர்ந்து புறையோடி இருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டாக கதை புனையப்பட்டிருக்கிறது. அழகிய எளிய முகப்புதான்! ஆபாச முகப்பு இல்லாத வரையில் பாராட்டுக்குரிய படைப்புதான் இது.

•மு'

6-ம் பக்கத்தொடர்ச்சி

நெருப்பு—என் நெஞ்சுக்கு இடும் நெருப்பு.

இதனைத்தான் நீவிர் விரும்புகிறீர்களா?

இந்தி எதிர்ப்புணர்ச்சி என்ற நல்ல நோக்கத்தை. தவருன வழிகள்மூலம் எடுத்துக்காட்டுவது இந்தி எதிர்ப்பாளர்களுக்கு அல்ல. கழக அரசை கவிழ்க்க வேண்டும் எனப் பதை பதைத்துக்கிடக்கும் காங்கிரசுக்குத்தான் வெற்றியைத் தேடித்தரும்.

வன்முறைக் கிளர்ச்சி நீடிக்கும் ஒவ்வொரு விநாடியும் உங்களையும் அறியாமல், காங்கிரசுக்கு வெற்றியையும் உம்மால் அமைக்கப்பட்ட அரசுக்கு வீழ்ச்சியையும் தேடிக் கொடுக்கிறீர்கள் என்ருகும்.

மிகுதியான வேதனை உணர்ச்சியுடன், உள்ளத்தில் பட்டதனை எடுத்துரைத்தேன், என்பேச்சுக்கு உரிய மதிப்பளிப்பவர்களாயிற்றே என்ற நம்பிக்கையுடன்.

இந்தி எதிர்ப்பு எம்முறையில் அமையவேண்டும் என்பதுபற்றி. உம்முடனும், பெரியவர்கள் பலருடனும் கலந்து பேசி திட்டம் வகுத்திட விரும்புகிறேன்.

உலகத் தமிழ் மாநாடு நடைபெற்று முடிந்ததும் இதற்கான ஒரு தனி மாநாடு கூட்டிட விழைகிறேன்.

பல பெரியோர்களின் யோசனைகளையும் பெற்று இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி எம்முறையில் அமையவேண்டும் என்று தீர்மானிக்க விரும்புகிறேன்.

அருள் கூர்ந்து, அதற்கான சூழ்நிலை உருவாகத் தக்க முறையில் நடந்துகொள்ள வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

வேண்டாம் வன்முறை! வேண்டாம் வன்முறை!

அறிவழி மறவாதீர்!

அமளிவழி தேடாதீர்!!

அண்ணாதுரை

---

அடைந்தபோது மணி ஏழடித்து ஐந்து நிமிடங்கள் ஆகியிருந்தன. "சாந்தா எங்கே?" என்று கேட்டேன். "அவள் காரில் திருச்சிக்குத் தன் தோழி ஒருத்தியோடு சென்றிருக்கிருள்" என்ருர்கள். அதனை வீட்டிலிருந்தோர் நம்பியது போலவே நானும் நம்பினேன். ஆனல் அவள் எந்தத் தோழியோடும்செல்லவில்லை. தனியாகவே சென்றுவிட்டாள். கன்னி மடத்தில் சேரச் சென்றுவிட்டாள்.

மறுநாள் எனக்கும் அவளுடைய பெற்ரேர்க்கும் தனித்தனியே வந்து சேர்ந்த கடிதங்கள் சாந்தகான்னியா மடத்தில் சேர்ந்துவிட்ட செய்தியைத் தெரிவித்தன. அன்று போய் கன்னி மடத்தில் சேர்ந்தவள் திரும்பவே இல்லை. இரண்டு ஆண்டுகளுக்குள் ஏதோ ஒரு நோய் கண்டு இறந்துவிட்டாள்.'' என்று சுந்தரேசன் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே அவருடைய கண்கள் குளமாயின, என் நெஞ்சம் உருகியது.

சுந்தரேசன் தம் கண்களைத் துடைத்துக்கொண்டு மீண்டும் அந்தப் படங்களை நோக்கினர். "மூன்ருவதாக உள்ள தெய்வத்தின் பெயர் மங்களம்!" என்ருர், 'இத்தப்பெண் எங்கிருந்து வந்தாளோ? இந்தப் பெண்ணின் காதலையாவது ஏற்று வாழச் செய்திருக்கக்கூடாதா! இவளையுமா அந்த இரு பெண்களைவிட்டதுபோல்விட வேண்டும்?'' என்று நினைத்தவாறே நண்பர் சொல்வதைக் கேட்கலானேன்.

"மங்களம் எனக்கு உறவானவள்தான். இவளுடைய தந்தை இங்கே உள்ள பெரிய மருத்துவனைக்கு வந்து சிலநாள் தங்கியிருந்தபோது இவளும் இவளுடைய தாயும் எங்கள் வீட்டில் வந்து தங்கினர்.

அவளை நான் நிமிர்ந்து நோக்காமல் அவளோடு நான் ஒரு சொல்லும் பேசாமல் இருந்தும்கூட எப்படியோ ஏனே நான் அவளுடைய உள்ளத்தில் இடம் பெற்றுவிட்டிருந்தேன். அதை அவள் என் அன்னையிடமே சொல்லியிருக்கிருள். அவர்கள் எல்லோரும் ஊர் திரும்பிய பின் என் அன்னை அதுபற்றிக் கூறினுர்கள், "அத்தை! எனக்கு உங்கள் வீடு நிரம்பப் பிடித்திருக்கிறது. உங்கள் வீட்டைவிட்டுப் போகவே எனக்கு மனம் இல்லை" என்று அவள் சொன்னுளாம். "ஊர் போய்ச் சேர்ந்ததும் அப்பாவிடம் சொல்லி கடிதம் எழுதச் செய்கிறேன். உங்களுக்கும் மாமாவுக்கும் என்னைப் பிடித்திருந்தால் நீங்கள் இருவரும் ஒரு முறை எங்கள் ஊருக்கு வாருங்கள்!'' என்றும் அவள் அழைத்தாளாம். சகுந்தலாவும், சாந்தாவும் பணக்காரவீட்டுப் பெண்களாக இருந்ததால் அவர்களுடைய அன்பை ஏற்கத் தயங்கினேன். மங்களம் ஏழைப் பெண்ணுகவும் எனக்கு ஒரு வகையில் உறவாகவும் இருந்ததால் அவளை என் துணைவியாக ஏற்கத் தயங்கவே இல்லை, "அவர்களுடைய ஊருக்கு என்றைக்குப் போகலாம் சொல்லுங்கள் அம்மா!" என்று கேட்டேன். 'அவர்களிடமிருந்து கடிதம் வரட்டும் போகலாம்'' என்ருர்கள்.

"மூன்று நாட்களுக்குப் பின் மங்களத்தின் தந்தையிடமிருந்து எங்களுக்குக் கடிதம் வந்தது. மங்களம் தன் பெற்ரேருடன் வீடுபோய்ச் சேராமலே வழியிலேயே கார் விபத்தில் இறந்துவிட்ட துயரச் செய்தியைத்தான் அது தாங்கி வந்தது." என்று சுந்தரேசன் நிறுத்திக் கலங்கி தம் கண்களைத் துடைத்துக் கொண்டார். "இப்படி என்னைத் தம் நெஞ்சார விரும்பி மறைந்துவிட்ட இந்த மூன்று கண்மணிகளும் இன்று தெய்வங்களாக மாறி என் நெஞ்சில் இருந்து வாழ்கிருர்கள்" என்ருர்.

ஒரு கிளை இல்லை என்ருல் இன்னெரு கிளைக்குத் தாவுதல் என்ற முறையை காதலில் மேற்கொள்ளாமல் தம் நெஞ்சில் ஒரே ஒருவருக்கு மட்டுமே இடம் தந்து மறைந்துவிட்ட அந்தப் பெண்மணிகள் மூவரும் தெய்வங்களாக மதிக்கப்படத் தகுந்தவர்கள்தாம் என்று என் மனமும் சொல்லியது.

நண்பருடைய வீட்டுக்கு வந்து நெடு நேரம் ஆகிவிட்டதை அறிந்து எழுந்தேன், நண்பரை மட்டுமின்றி அவர் தம் நெஞ்சில் வாழும் மூன்று தெய்வங்களையும் நோக்கியவாறு கை குவித்து விடைபெற்று வீடு திரும்பினேன்.

●

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஜெயராஜ் எம். எல். ஏ.யை காலேவெட்டி முடமாக்கியதே அந்தக் காங்கிரசைதான்!

மதுக்குடிக்கு 'பெர்மிட்' பெற்றுவைத்துக் கொண்டு மதுவிலக்குவேண்டும் என்று மான ஈனமற்ற முறையிலே எழுதி எழுதிப் பார்த்து மகிழ்கிறதே அந்தக் காங்கிரசை!

காந்தியாரது புனிதக் கொள்கைகளை யெல்லாம் கல்லறைக்கு அனுப்பிவிட்டு, அதன்மேலேயே காலேத் தூக்கிவைத்துக் கொண்டு பேய்ச்சிரிப்பு சிரிக்கிறதே அதனைத் தான்!

இந்துஸ்தானிக்கு அரசியல் அந்தஸ்த்து தரப்படவேண்டும் என்ற காந்தியாரது சதிக் குக்கூட முக்காடு போட்டுவிட்டு, இந்திக்கு சாமரம் வீசுகிறதே அந்தக் காங்கிரசை!

அரசியல் சட்டத்திருத்தம் வேண்டாம்; மொழிச் சட்டத்திருத்தமே போதும் என்று தூதுக்குழு அனுப்பியதே அந்தக் காங்கிரசை!

கலேக்கப்பட வேண்டும் என்று நினைத்துப் பார்க்கிற காங்கிரஸ் எது என்று அடுக்கிக்கொண்டே போகலாம் நண்பா! ஆனுல்—

"நான் நெடுங்காலமாக காங்கிரஸ் இயக் கத்தில் தீவிர பங்குகொண்டு உழைத்து வரு பவன், நான் மட்டுமல்ல; என் சகோதரர் கள் ஏழுபேர்களும் தேசபக்தர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நான் காங்கிரஸ் பேச்சாள ராகவும், காங்கிரஸ் பிரசாரக் கமிட்டித் தலே வராகவும் தேசபக்தர்கள் அறப்போராட்ட முன்னணியின் கன்வீனராகவும், இருந்து வருகிறேன்......

காங்கிரஸ் தீவிர அங்கத்தினராக இருக் கத் தகுதிபெறும் விண்ணப்ப நமூனுவில் கண் டுள்ள ஒன்பது உறுதிமொழிகளில் "நான் முழு மதுவிலக்கை அனுஷ்டிக்கிறேன்" என்றுள்ள 3-வது உறுதிமொழியை மீறி மது பெர்மிட் பெற்று தவருமல் மது அருந்தி வருகிற கார ணத்தினுல்...என்பவரை தீவிர அங்கத்தினர் பதவியிலிருந்தும், பிரதேச காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் பதவியிலிருந்தும், விலக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்......"

என்று திருக்குறள் முருகேசன் என்ற காங்கிரஸ் முன் னணி பேச்சாளர் இதழ்களுக்கு அறிக்கை அனுப்பி தன் நிலேயைத் தெளிவுபடுத்திக் காட்டுகிற நிலேமைக்கு ஆளாக்கப்பட்டுள்ள காங்கிரஸ் கலேக்கப்பட வேண்டும் என்று நினைத்துப் பார்ப்பதில் தவறு என்ன நண்பா!

அந்த உறுப்பினரை, கட்சியை விட்டு விலக்கக் கேட்ட காரணத்தாலேயே தாக்கப்பட்டிருக்கிருராம்! கண்ணீர் சுரக்கும் கடிதம் எழுதி இருக்கிருர்!

சுதந்திரப் போராட்டத்தை நடாத்திய காங்கிரசின் வரலாறு இப்படியா இருக்கிறது? இல்லேயே!

வடபுலத்தார் இன்று கட்சிக்குள் தமக்கிருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்தி, இந்திக்கு ஏற்றம் கொடு; இல்லேயேல் இந்தா இராஜினுமா! என்று எழுந்து நிற் கிருர்கள்! இதுகண்டு மத்திய அரசு "இந்தா விபீஷணு இலங்காபுரிப் பட்டம்!" என்று ஏற்றுக்கொள்கிறது.

காமராசர் ஒரு தலேவர்! அகில இந்தியக் காங்கிர சுக்கே தலேவர்! அவரது சில பல திட்டங்களே நேரு பெருமகனுரே ஏற்று செயல்படுத்த முன்வந்தார் என்ற சிறப்புக்கு உரியவர்!!

புதிதாகப் பதவியேற்ற நிசலிங்கப்பாகூட. காம ராசர் இருந்த இடத்தில் இருக்க தகுதி வாய்ந்தவன் நான் அல்லன் என்று எடுத்துக் காட்டும் அளவுக்கு எடுத்துக் காட்டாகப் பயன்படும் பெரியவர்!

காமராசரது திறன் செயல்பட்டதோ, படவில் லேயோ, அவரது முயற்சியினுலேயே இரண்டு முறை இந்தியத் துணைக் கண்டத்தின் மாபெரும் பதவிப் போட் டியை கெல்லி எறிந்தவர்! இதனுல் காங்கிரஸ் வரலாற் றில் அழியா இடம் பெற வேண்டியவர்!

அவரது தலேமை இழித்து விமர்சிக்கப்படுகிறது— இந்திக்கு ஆதரவு தேட வருவோரால்!

அவரது யோசனைகள் தூக்கி எறியப்படுகின்றன!

காமராசரை, ஒரு காங்கிரஸ்காரர் என்றும், அவர் காங்கிரசின் வளர்ச்சிக்குத் தன் இளமையை பலி கொடுத் தவர் என்றும்கூட ஒப்ப மறுக்கிருர்கள் அந்த ஓநாய்க் கூட்டத்தினர்!

இந்நிலேயில், காமராசர் பதவி விலகவேண்டும் என்பதையும், த. நா. கா. க. கலேக்கப்பட வேண்டும் என்ற நமது நினேப்பின் வடிவையும் விமர்சித்து நண்பர் ஒருவர் அஞ்சல் எழுதி இருக்கிருர்!

"24—12—67 காஞ்சி இதழில் எழுதி இருந்த "தமிழ் நாடு காங்கிரஸ் கலேக்கப் படும்?" என்ற கட்டுரையைப் படித்தேன்! அதில் வேண்டப்பட்ட ஒரு செய்தியை எனது அறிவு ஏற்றுக்கொள்ளவில்லே. தமிழ் நாடு காங்கிரஸ் கலேக்கப்பட வேண்டும் என்று கேட்பதில் பொருள் இல்லே;

நான் ஒன்று கேட்கிறேன்! தி. மு. கழகம் இந்தியை எதிர்க்கிறது! இந்தி எதிர்ப்புணர்ச்சி யும் அதன் வெற்றியில் கணிசமான பங்கினைப் பெற்றுள்ளது. இன்று இந்த ஆட்சிமொழி மசோதாவை எதிர்த்து அதனைக் கண்டிக்கும் வகையில் பதவி விலகுமா?

இப்படிக் கேட்பது தவறுனது என்றே, முறை கேடானது என்றே தி. மு. க. கருது மானுல், த. நா. கா. க.வைக் கலேக்கக் கோரு வதும் முறை கேடானதுதான்......"

என்று விளக்கம் கொடுத்திருக்கிருர் அந்தக் கட் டுரைக்கு!

நண்பா! இந்தி எதிர்ப்பு என்ற தீக் கொப்பறைக்கு எரியாகப் பயன்பட்டு வந்ததில், கழகத்துக்குள்ள பாரம் பரியமே தனியானது! காங்கிரஸ் அதுவும், தமிழ்நாடு காங்கிரசில் ஒரு சிலர் மட்டும், இந்தியை இன்றைக்கு எதிர்க்க வந்திருக்கிருர்கள்! அதுவும், இந்தியை இன்று தமிழகத்தில் எதிர்த்துக் காட்டவில்லேயானுல், நாளைய அரசியல் இங்கே நடைபெருது! என்பதற்காக!

கடந்த கிழமை என்று நினைக்கிறேன். பம்பாய் மாநிலத்திலிருந்து வெளிவருகிற ஒரு ஆங்கில ஏடு, எழுதி இருந்தது:

"இந்தி விஷயத்திலே நாடாளு மன்றம் எந்தவித முடிவை மேற்கொள்கிறதோ—அந்த

## ஆளும் உரிமை இல்லையா?

மானத்திற்காகவும் மரியாதைக்காகவும்தான் மனிதர்கள் போராடுகிறார்கள்! தேசங்கள் போராடுகின்றன! அவர்கள் போராடுவது, ஏதோ கொஞ்சம் காசுக்காகவோ—பணத்திற்காகவோ அல்ல! மானத்திற்காகவே!

அரசியற் சட்ட எட்டாவது ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா மொழிகளுக்கும் சமமரியாதை தரப்பட்டுள்ளதாக, நாங்கள் கருதவில்லை.

தமிழ் ஒரு பகுதிக்கு மொழியாக இருக்கின்ற இந்த நாட்டைத் தமிழ் தெரியாதவன் ஆளமுடிகிறதென்ருல், தெலுங்கு ஒரு பகுதிக்கு மொழியாக இருக்கின்ற இந்த நாட்டைத் தெலுங்கு தெரியாதவன் ஆளமுடிகிறதென்ருல், இந்தியை அறியாத எனக்கு இந்த நாட்டின் மிச்சப் பகுதியை ஆள உரிமையில்லையா?

—தென்னேட்டி விசுவநாதம்
(மாநிலங்களவையில்)

முடிவின் எதிரொலியிலிருந்துதான் காங்கிரசின் எதிர்காலத்தைக் கணிக்க வேண்டும்,''

என்று பொருள்படும்படியாக அது எழுதி இருந்தது. இப்போது நாடாளுமன்றம் முடிவு செய்துவிட்டது! இந்த முடிவிலிருந்து நாம் பெறுவதென்ன? காங்கிரசின் எதிர்காலத்தைக் கணிக்கத் தொடங்கினுல், கிடைப்பதென்ன? அது கலைக்கப்பட வேண்டுமென்று நினைத்துப் பார்ப்பதல்லவா!

தமிழகத்தைப் பொறுத்தமட்டில், 1967-ல் காங்கிரஸ் கலைக்கப்பட்டு விட்டது—மக்கள் மனதிலிருந்து! இப்போது நாம் நினைத்துப் பார்ப்பது, அது அதிகார பூர்வமாக கலைக்கப்பட்டு விட்டது என்று ஒப்புக்கு ஒரு அறிக்கை விடப்படுமானுல், இந்திப் பிரச்னையில், இந்தி வெறியர்களது கண்கள் ஒருகால் திறக்கப்பட ஏதுவா காதா? என்றுதான்!

காங்கிரஸ் கலைக்கப்பட வேண்டும் என்று கழகம் கருதி—அதனையே தீர்மானமாகக் கூறுமானுல், கழகம் தன் ஜனநாயகப் பண்பிலிருந்து விலகிவிட்டது என்பதையும் ஒப்புக்கொள்ள முடியும்! ஆனுல், ஜனநாயகத் தத்துவத்துக்கே இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும் தன்னை எடுத்துக்காட்டாக்கிக் கொண்டிருக்கும் கழகம் அப்படி கருதாது!

தமிழகக் காங்கிரசின் இன்றைய இந்தி எதிர்ப்பு உணர்ச்சி, தன் சுயவாழ்வைக் கொண்டுள்ளது. பாரம்பரிய மற்றது.

இந்தியைத் திணிப்பதும், பிற மொழியினரை இரண்டாந்தர மூன்ருந்தர குடிமக்களாக்குவதும், வடபுலத்துக் காங்கிரஸ்!

அதாவது வடபுலத்துக் காங்கிரஸ் மேலிடம் இந்திக்குக் கச்சை கட்டிக்கொண்டு எழுந்துவிட்டது; தமிழகக் காங்கிரஸ் எதிர்ப்பதாகச் சொல்கிறது.

காங்கிரசும் காங்கிரசும் மோதுகிறதாக மாற்ருர் கண்களுக்கு ஒரு எடுத்துக் காட்டுதான் இது. இந்தி எதிர்ப்புணர்ச்சி முழுதாக இங்குள்ள காங்கிரசாரின் இதயத்தில் இடம் பற்றி இருக்குமானுல், இங்கிருந்து ஒரு தூதுக் குழு அனுப்புவானேன்?

ஆட்சி மொழிச் சட்ட மசோதா பெரும்பான்மை வாக்குகள் பெற்று நிறைவேறியது என்பதற்கு எட்டுப்பத்தித் தலைப்பின் பொருள் என்ன?

காமராசர் கூறினுர், காலங்கடந்து; அதன் பின் ஏற்பட்ட ஞானேதயம்! புதிய கருவி!!

ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டதனுல், அதனைஎதிர்த்து கழகம்ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகுமா என்று கேட்பதில் விவேகமில்லைதான்!

காரணம் காங்கிரஸ் ஆட்சி தூக்கி எறியப்பட்டபின் ஒரு நிலையான ஆட்சி—இந்தியை சர்வவல்லமையோடும் எதிர்க்கிற ஒரு ஆட்சி அமைந்திருக்கிறது. இந்தியை ஆட்சியே எதிர்க்கிறது என்பதனை எடுத்துக் காட்டவாவது அந்த கட்சி பதவியில் இருக்க வேண்டும்!

ஆனுல், காந்தீயத்தத்துவங்களுக்கு முரண்பட்டுப் போய்விட்ட, குடிகாரர்களுக்கும், கொலையாளிகளுக்கும் முற்றிலும் இடந்தந்து, அராஜகச் செயல்களுக்குத் தன்னை ஆளாக்கிக்கொண்டதும், மக்கள் மனதில் இருந்து அகற்றப்பட்டதுமான ஒரு கட்சி கலைக்கப்பட்டால் என்ன? அதுவும் அப்படி ஒப்புக்கு மட்டும் ஒரு அறிக்கைவிட்டால் என்ன? என்று நினைத்துப் பார்ப்பது எப்படித் தவருக முடியும்? முறை கேடானதாக இருக்கும்?

ராஜினுமா அச்சுறுத்தல் எப்படி இந்திக்காரர்களது திருத்தங்களுக்கு இடம் பிடித்துத் தந்ததோ அப்படி ஒரு மாநிலக் காங்கிரசே கலைக்கப்பட்டுவிடும் என்ற அச்சுறுத்தல், அந்த மசோதாவை வாபஸ் பெறச்செய்ய ஒரு போராட்ட நடவடிக்கை என்ற ரீதியில்தான் கூறப்பட்டதேயொழிய, கட்சி கலைக்கப்படும், கலைக்கப்பட வேண்டும் என்பதால் அல்ல!

ஆத்திரப்படுகிருர்கள் நண்பர்கள்! இந்தி எதிர்ப்பின் பாரம்பரியத்தையும், உள்நோக்கத்தையும் முழுதாக உணர்வோர், யாரும் இதில் ஆத்திரப்பட வழியில்லை.

காந்தியாரே சொல்லவில்லையா, காங்கிரசைக் கலைத்துவிடுங்கள் என்று! ஒரு இலட்சிய ஈடேற்றத்துக்காக அப்படி ஒப்புக்கு ஒரு அறிக்கை விடுவதனுல் குடி முழுகிப் போய்விடுவதுதான் என்ன? குடி முழுகிப் போகாது.

திருக்குறள் முருகேசன் அறிக்கை எதை விளக்குகிறது? இந்தக் காங்கிரஸ் எப்படிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதனையல்லவா!

இப்படிப்பட்ட காங்கிரஸ் கலைக்கப்பட்டே போனுல் தான் என்னவாம்!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்.



நம் உணவில் மூன்றில் ஒரு பாகம் சேதமாகிறது —
அழுகும் பண்டங்களைப் பாதுகாக்காவிடில் உணவுப் பிரச்சனை மேலும் தீவிரமாகும்.

# சரியான 'பாக்கிங்' முறை மூலம் இச் சேதத்தைத் தடுக்கலாம்

காய்கறிகள், பழங்கள், மீன், இறைச்சி, பால் பொருட்கள் இவையே விரைவில் சேதமடைந்து உபயோகிக்க இயலாமல் போகின்றன. அதன் காரணங்கள் பல.

அவைகளை உற்பத்தி செய்யுமிடங்களிலிருந்து தொலை தூரத்தில் இருக்கும் சந்தைகளுக்குக் கொண்டு செல்ல வேண்டியிருக்கிறது. வழியில் பல்வேறு வெப்ப நிலைகளால் பாதிக்கப்படுவதால் விற்பனை இடத்தையடையும் தருணத்தில் அவை நல்ல நிலையில் இருப்பதில்லை. இவற்றைப் பதமாக வைக்க ஏற்ற குளிர்ச்சாதன வசதிகளோ மற்ற வசதிகளோ இல்லாமையே இதன் காரணம். இந்நிலையில் இவற்றுக்குப் பாதுகாப்பளிக்கும் ஒரே வழி சிறந்த 'பாக்கிங்' முறையே.

விஞ்ஞான முறையில் பதப்படுத்தி 'பாக்' செய்தால் இப்பொருள்கள் சேதமடைவதைத் தவிர்க்க முடியும். மேலும், பெரும் அளவில் நாட்டில் எல்லா இடங்களுக்கும் கொண்டு செல்லவும் 'பாக்' செய்யப்பட்ட பொருள்கள் வசதியானவை

நாட்டின் உணவு சேதமாவதைத் தடுக்க மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தினர் எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் விஞ்ஞான முறையில் பதப்படுத்தும் முறைகளை அளிக்கிறார்கள். உணவுப் பொருட்களைச் சோதிப்பது, அவற்றுக்கேற்ற 'பாக்கிங்' முறைகளை சிபாரிசு செய்வது - உதாரணமாக, வெவ்வேறு மாதிரியான தகர டின்களிலும், மற்றும் வெளிநாடுகளிலிருந்து அறிந்து வந்த தொழில் நுட்பத்துடன் கூடிய சிறந்த 'பாக்கிங்' முறைகளையும் அளிப்பது இவையெல்லாம் இவ் வசதிகளில் அடங்கியவை.

இந்தியாவில் உள்ள 9 நிறுவனங்கள் மூலமும் மெட்டல் பாக்ஸ் கம்பெனியார், உணவுச் சேதத்தை தடுக்க உதவுகின்றனர். இப்போதைய உணவுப் பற்றுக்குறை நிலையில் எங்கள் பணி மிகவும் சிறியது என்பதை நாங்கள் அறிவோம். ஆயினும் இச் சமயத்தில், சிறு துளியும் பெரு வெள்ளமாக உதவும் என்ற நம்பிக்கையே மெட்டல் பாக்ஸ் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

MB

## மெட்டல் பாக்ஸ்

பாதுகாப்பான [illegible]ாக்கிங்

MB/4101

காஞ்சி 31-12-67 Regd. No. M. 7894

# காஞ்சி

## பொங்கல் மலரில்

சுவைமிகு கனிகளென

அறிஞர் அண்ணா

அவர்கள் எழுதும்

நீண்ட கதை

## அப்போதே சொன்னேன்!

உள்ளத்தைத் தொட்டு
சிந்தனையைத் தூண்டி
நகைச்சுவையூட்டி
உங்களை மகிழ்விப்பதற்கே

அறிஞர் அண்ணா அவர்களின்

## "இன்ப ஒளி"

என்ற புதிய தொடர்கதை இதில்
தொடங்குகிறது!

தம்பிக்கு மடலும்

எழுதுகிறார்கள்.

அத்துடன்,

அமைச்சர்கள், தலைவர்கள், கலைஞர்கள்

முதலியோரது கதை, கட்டுரை, கவிதைகளும் நிரம்பியதாய்;

தமிழ் மாநாடு

சிறப்புக் கட்டுரைகளோடு தயாராகிறது!

விலை 1 ரூ 50

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.